பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 10 | வியாழக்கிழமை | 22.02.2024 | கதிர் 107

## இனி இது ரகசியம் அல்ல!

எதைத் தின்றால் சித்தம் தெளியும் என்கிற அளவுக்கு எங்கிருந்தெல்லாம் காசைப் பிடுங்க முடியுமோ அங்கிருந்தெல்லாம் பிடுங்குவதிலேயே குறியாக இருக்கின்றது. கடந்த மாதம் முதல் அரச பாடசாலைகளில் இருந்து நீர் கட்டணம் அறவிடப்படும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதுவரை பள்ளிகளில் குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படாமல், மாணவர்களுக்கு இலவசமாகவே குடிதண்ணீர் வழங்கப்பட்டது.

மாதத்திற்கு 20 நாட்கள் பள்ளிகள் திறக்கப்படும் என கருதி மாணவர்களுக்கும், கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கும் ☞2

# மீண்டும் ஒரு ஆணைக்குழுவா? தமிழ் சிவில் அமைப்புக்கள் எதிர்ப்பு

இலங்கை ஆளும் தரப்பு புதிய உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை உருவாக்குவதற்கு முன்னதாக ஏற்கனவே உருவாக்கப்பட்ட 36 ஆணைக் குழுக்களையும் அங்கீகரிக்க வேண்டும். இலங்கை ஆளும் தரப்புகளால் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் எண்ணிக்கையை நினைவில் வைத்திருக்க முடியவில்லை.

இவ்வாறு சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம், இலங்கை மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டு மையம், காணாமலாக்கப்பட்டவர்களது குடும்பங்களது அமைப்பு,பெண்கள்செயற்பாட்டு வலையமைப்பு ஆகிய அமைப்புக்களே இதனைக் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

அவ்வமைப்புக்கள்விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ☞2

## சஜித் எச்சரிக்கை

உயர்நீதிமன்றத்தின் தீர்மானங்களுக்கு முரணான வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் சட்டவிரோதமான முறையில் நிறைவேற்றப்பட்டது. சபாநாயகருக்கு சரியான ஆலோசனைகளை வழங்குவது அதிகாரிகளின் பொறுப்பாகும். குறைப்பாடுகளை திருத்திக்கொள்ளாவிடின் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவருவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ☞2

## அனைவரும் ஒன்றுபட்டால் நாட்டில் துரித அபிவிருத்தி

### மக்களுக்கு ரணில் எடுத்துரைப்பு

அனைவரும் இலங்கையர்களாக ஒன்றுபட்டால் நாட்டை துரித அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல முடியுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலை கோணேஷ்வரா இந்து கல்லூரி மைதானத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த 10ஆவதுதேசியசாரணர் ஜம்போரியை நேற்றுத் தொடக்கிவைத்துஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை சாரணர இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 10ஆவது தேசிய சாரணர் ஜம்போரி ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

மாற்றத்துக்கான தலைமைத்துவம் என்ற தொனிப்பொருளின் கீழ் பெப்ரவரி 20 முதல் 26 வரையில் நடைபெறவிருக்கும் தேசிய ☞2

## திருத்தப்பட்ட மின் கட்டணம் 18 சதவீதத்தால் குறையும்

மின்கட்டணம் 18 சதவீதத்தால் குறைக்கப்படும். திருத்தம் செய்யப்பட்டமின்கட்டண திருத்த யோசனை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலைவரம்தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது:

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடு எவ்வாறான நிலையில் இருந்தது என்பதை பலர் மறந்து விட்டார்கள். எரிபொருளுக்கான நீண்ட வரிசை,18 மணி நேர மின்விநியோக துண்டிப்பு, எரிவாயு பற்றாக்குறை என அனைத்து பிரச்சினைகளும் ☞2

## பணிபெண் வேலைக்கு செல்வோரை முழுதாக நிறுத்த அமைச்சர் பணிப்பு

இலங்கைப் பெண்களை வீட்டுப்பணிப் பெண்களாகவெளிநாட்டு வேலைக்குஅனுப்புவதை முற்றாக நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளைஎடுப்பதற்கான முன்மொழிவைமற்றும் திட்டங்களை தனக்கு உடனடியாக வழங்குமாறு தொழிலாளர் மற்றும் வெளிநாட்;டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உயர் நிருவாகத்திற்கும், அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்நிலையங்களின் சங்கத்திற்கும் அறிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் நேற்று விடுத்துள்ளபதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும்குறிப்பிடுகையில்,

வீட்டுப் பணிப் பெண்களாக தொழிலாளர்களை அனுப்புவதை நிறுத்-திவிட்டு, அதிக சம்பளம் ☞2

## ஐ.நா உணவு, விவசாயப் பணிப்பாளர் பிரதமர் தினேஸ் இடையில் சந்திப்பு

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் ஐக்கிய நாடுகளின் உணவுமற்றும்விவசாய அமைப்பின்பணிப்பாளர் நாயகம் கலாநிதி கியூ டொன்கியுகும் இடையிலான சந்திப்பொன்று அலரி மாளிகையில்நடைபெற்றது.

பல ஆண்டுகளாக விவசாயம் மற்றும் கிராமிய பொருளாதார மேம்பாட்டிற்கு அளித்து வரும் ஆதரவிற்காக உணவு மற்றும் விவசாய அமைப்புக்கு நன்றி தெரிவித்த பிரதமர், விவசாயம் மற்றும் கடற்றொழில் துறைகளில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு மேலும் ஆதரவளிக்குமாறு உணவுமற்றும்விவசாய அமைப்பிடம் கேட்டுக் கொண்டார். கிராமிய விவசாயத்திற்கு சக்தி வளத்தை உற்பத்தி செய்யும்வகையில்சூரிய சக்தியில் இயங்கும் நீர் பம்பிகளை நிறுவுவது குறித்து பிரதமர் விசேட கவனம் செலுத்தினார்.

இவ்வாறான திட்டங்கள்ஆபிரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இலங்கையிலும் அவ்வாறான திட்டத்தை உணவு மற்றும் விவசாய அமைப்பு பரிசீலித்து வருவதாகவும் ☞2

## காஸாவில் போர் நிறுத்தம் உடன்அவசியம்; ஈரான் அமைச்சரிடம் ரணில் இடித்துரைப்பு

உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகைத் தந்திருக்கும் ஈரான் அயலுறவுத்துறை அமைச்சர் ஹூசைன் அமீர் அப்துல்லாஹியன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை அவரது அலுவலகத்தில்சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, காஸா எல்லைப் பகுதிகளில் போர் நிறுத்தத்தைஅமுல்படுத்தி சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஈரான் அயலுறவுத்துறை அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

அந்த சமாதான ஒப்பந்தம் ஒருதலைபட்சமாக இருக்கக் கூடாதெனவும் இரு தரப்புகளும்ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஏற்படுத்திகொள்ளப்பட வேண்டும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும், இஸ்ரேல் அரசின் பாதுகாகப்பை உறுதிப்படுத்தி, ஐந்து வருடங்களுக்குள் பாலஸ்தீன அரசை அமைக்க வேண்டியது அவசியமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார

இந்து சமுத்திரத்திற்குள் பெர்சிய வளைகுடா நாடுகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வலயத்தின் கப்பல் போக்குவரத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு இலங்கைஅர்பணிக்கும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது இருநாடுகளுக்கும் இடையிலான கலாச்சார தொடர்புகளை ☞8

## போதை, பாதாள உலகத்தை ஒழிக்கும் எந்த நடவடிக்கையும் நிறுத்தப்படாது

### அமைச்சர் ரிரான் அலஸ் மீண்டும் தெரிவிப்பு

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்தை ஒடுக்குவதற்கும்,பெண்கள்மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் நோக்கிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள எந்தவொரு நடவடிக்கையையும் நிறுத்தத் தயாரில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்தை ஒடுக்குதல் மற்றும்பெண்கள்மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பது தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ச்சியாகமேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எத்தகையஅழுத்தங்கள் வந்தாலும் இந்த செயற்பாடுகளைநிறுத்துவதற்குநாங்கள்தயாராக இல்லை.

இந்தவேலைத்திட்டம் தொடர்பில் எம்மீது பல்வேறுகுற்றச்சாட்டுகள் முன்வைக்கப் ☞8

## இந்திய மயமாக்கத்தினால் தேசிய பாதுகாப்புக்கு தாக்கம்

### துள்ளிக் குதிக்கிறார் சரத் வீரசேகர

நாட்டின் முக்கிய கேந்திர மையங்களான துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்களை இந்தியநிறுவனங்களுக்கு வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு நேரடி தாக்கங்களை ஏற்படுத்தும்.

பொருளாதார நெருக்கடிக்குதீர்வுஎன்று குறிப்பிட்டுக் கொண்டு இந்தியாவுக்கு சாதகமாக செயற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற, நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு



விவாதத்தில் உரையாற்றுகையில் ☞8

## இனி இது .....

மாதம் 400 லிட்டர் தண்ணீர் இலவசமாக வழங்கப்படும் என சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதற்கு மேல் நுகர்வு இருந்தால் பள்ளி நிர்வாகமே கட்டணத்தை வசூலிக்க வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது. மேலும், தற்போது நீர் விநியோகம் இல்லாத பாடசாலைகளுக்கு புதிய நீர் விநியோகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும் எனவும், மேலதிக நீர் விநியோகம் பெறப்படும் போது நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் அறவிடப்படும் எனவும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

அதிபர், ஆசிரியர் இல்லங்கள், நீச்சல் குளங்களுக்கு தனித்தனியாக குடிநீர் வழங்க வேண்டும் எனவும், உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான கட்டணத்தை குடியிருப்பாளர்களும், நீச்சல் குளங்களின் கட்டணத்தையும் வாடகை மூலம் கிடைக்கும் வருமானத்தில் இருந்து செலுத்த வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் பெருமளவில் வீணாகும் நீரை முகாமைத்துவப்படுத்துவதே இதன் நோக்கமாகும் என்று ஆளும் தரப்பில் கூறப்படுகின்றது. எவ்வாறாயினும், இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் பாடசாலைகளில் நீர் முகாமைத்துவத்தை மேற்கொள்ள முடியாது எனவும், இந்த சுற்றறிக்கை தொடர்பில் தனக்கு தெரியாது எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

போகிற போக்கில் கிணற்றுத் தண்ணீருக்கும் அரசு வரி விதித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரதூரமான மனித உரிமைமீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை பாதிக்கப்பட்ட இலங்கையர்களால் கணக்குவைக்க முடியாத அளவிற்குத் தாண்டியுள்ளது.

இருந்தும் பிறிதொரு ஆணைக்குழு உருவாக்கப்படவுள்ளது. உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்கு எனப்படும் இப்புதிய ஆணைக்குழு, உண்மையைக் கண்டறிவதற்காக இலங்கை இலங்கை ஆளும் தரப்புகளால் உருவாக்கப்பட்ட குறைந்தது 36 ஆணைக் குழுக்களைக்கொண்ட வரிசையில் புதிதாக இணைந்துள்ளது. எனினும், நீதியும் பொறுப்புக்கூறலும் மழுப்பலானதாகவே தொடர்ந்தும் இருந்துவருவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர். நடவடிக்கை எடுக்கக்கோரி, காணாமற்போனவர்களின் குடும்பங்கள் துணிகர வீதிப்போராட்டங்களை ஆரம்பித்து தற்போது எட்டு ஆண்டுகள் கடந்து விட்டன.

தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ளாமலேயே 240இற்கும் மேற்பட்ட வயதுமுதிர்ந்த உறவினர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஆளும் தரப்பால் முன்மொழியப்பட்ட இப்புதிய உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நிராகரித்து 37 குடியியல் சமூக அமைப்புக்களும் 19 செயற்பாட்டாளர்களும் ஏற்கனவே வெவ்வேறு அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

கடந்தகாலப் பொறிமுறைகளின் மோசமான தோல்வியை, ஆவணங்களைப் பகிரங்கப்படுத்தத் தவறியமை, புதிய கட்டமைப்பிற்கான போதுமான அதிகாரமின்மை, சர்வதேச பிரதிநிதிகளை ஈடுபடுத்தாமை, பொருத்தமான நீதித்துறைப் பொறிமுறையின்மை, மற்றும் முந்தைய ஆணைக்குழுக்களின் நீண்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் தவறியமை ஆகியவற்றை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை ஆட்சியாளர்கள் கடந்த காலங்களில் அமைத்து, நாம் அடையாளம் கண்ட 36 ஆணைக்குழுக்களில் மூன்றிலொரு அதாவது 14 ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் ஒருபோதும் வெளியிடப்படவில்லை என்பது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

பெரும்பாலான ஆவணங்கள் அரசாங்க இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளபோதிலும், வெறும் ஒருசில ஆணைக்குழுக்களின் அறிக்கைகளே அவ்விணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. உண்மையில், கடந்த கால ஆணைக்குழுக்களால் வெளியிடப்பட்ட 22 அறிக்கைகளில், வெறும் 11 அறிக்கைகளின் பிரதிகள் மட்டுமே எம்மால் கண்டுபிடிக்க முடிந்தது.

கடந்த காலங்களில், என்ன நடந்தன என்பதை நிறுவுவதற்கான விசாரணை வடிவங்களே மேற்கொள்ளப்பட்டன, மாறாக, குற்றத்திற்குக் காரணமானவர்களைப் பொறுப்புக்கூறவைப்பதற்காக அல்ல, இதனால், அதே நபர்களால் திரும்பத்திரும்ப பெரும் அநீதிகள் மேற்கொள்ளப்பட வழிவகுத்தது.

இலங்கை ஜனாதிபதி அண்மையில் பரிந்துரைத்துள்ள பொறுப்புக்கூறல் முயற்சி தொடர்பான கடுமையான கவலைகளை இது எழுப்புகின்றது. ஜனாதிபதியின் இணையத்தளத்தில் கடந்தகால ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைப் பதிவேற்றம் செய்வதன் மூலமாக அவற்றின் உள்ளடக்கங்களை அங்கீகரிப்பதே உண்மையை நோக்கிய முதலாவது படியாக அமையும்.

நேர்மைத்தன்மையுடன் செயற்படுவதற்கு, படலந்த சித்திரவதைக்கூடத்தில் நடந்த சித்திரவதைகளும் தடுத்து வைப்புக்களும் ரணில் விக்கிரமசிங்கவிற்குத் தெரியாமல் நடந்திருப்பது சாத்தியமில்லை என்று கூறும் பத்தலந்த ஆணைக்குழுவின் அறிக்கை போன்ற, ஜனாதிபதியின் பெயரையும் உள்ளடக்கும் அறிக்கைகளையும் இதில் உள்ளடக்க வேண்டும்.

இதுவரை வெளியிடப்படாத அறிக்கைகளை வெளியிடும்படியும், கடந்த கால அறிக்கைகள் அனைத்தையும் பின்வரும் ஜனாதிபதி இணையத்தளத்தில் வெளியிடும்படியும் இலங்கை அரசாங்கத்தை நாங்கள் வேண்டிக்கொள்கின்றோம் என்றுள்ளது.

## திருத்தப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ மீது பொறுப்பாக்கப்பட்டது.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தினால் தேசிய பொருளாதாரம் பாதிக்கப்பட்டது, வெளிநாட்டு கையிருப்பு வரையறுக்கப்பட்டது பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்ததை தொடர்ந்து மக்கள் போராட்டம் தோற்றம் பெற்றது. அதனை தொடர்ந்து அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ பதவி விலகினார். அரசியலமைப்பின் பிரகாரம் அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

பொருளாதார பாதிப்புக்குமத்தியில் அரசாங்கத்தை பொறுப்பேற்றால் தமது எதிர்கால அரசியல் பாதிக்கப்படுமோ? என்ற அச்சத்தில் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை பொறுப்பேற்கவில்லை. அதனை தொடர்ந்து நாடாளுமன்றத்தின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. முறையான மறுசீரமைப்புக்களின் பின்னர் நாடு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. 2022 ஆம் ஆண்டு பொருளாதார பாதிப்பால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை பிரதான உதாரணமாக சர்வதேச மட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது நிலைமை மாற்றமடைந்துள்ளது. பொருளாதார பாதிப்பில் இருந்து குறுகிய காலத்தில் சிறந்த மறுசீரமைப்புக்களுடன் முன்னேற்றமடைந்த நாடுகளில் இலங்கை சிறந்த உதாரணமாக சர்வதேசத்தால் அடையாளப்படுத்தப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் பற்றி பேசப்படுகிறது. தவறான கொள்கையுடனான அரசியல் தீர்மானத்தை மீண்டும் எடுத்து நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளுவதா? அல்லது தற்போதைய பொருளாதார ஸ்திரப்படுத்தலை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதா? என்பதை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும்.

மின்சார கட்டணம் அதிகளவில் உள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். மின்னுற்பத்தியின் செலவை முகாமைத்துவம் செய்யும் வகையில் மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டதால் தான் மின்விநியோகம் இன்று சீராக முன்னெடுக்கப்படுகிறது. 2023 ஆகஸ்ட் மாதமளவில் எதிர்வரும் மூன்று மாத காலப்பகுதியில் வறட்சியான காலநிலை நிலவும் ஆகவே அனல் மின்நிலையங்களுடனான மின்னுற்பத்தியை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்று துறைசார் தரப்பினர் குறிப்பிட்டனர். அதற்கமைவாகவே கடந்த ஒக்டோபர் மாதம் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

ஆனால் அதிஷ்டவசமாக கடந்த ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் மற்றும் ஜனவரி ஆகிய மாதங்களில் அதிகளவான மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றன. நீர்மின்னுற்பத்தியின் வீதம் உயர்வடைந்தது. ஆகவே மின்கட்டணத்தை குறைக்க வேண்டும் என்ற தீர்மானம் கடந்த டிசெம்பர் மாதம் எடுக்கப்பட்டது. இதற்கமைய மின்கட்டணத்தை 03 சதவீதத்தால் குறைக்க முடியும் என ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது.

டொலருக்கு இணையாக ரூபாவின் பெறுமதி ஸ்திரப்படுத்தல், நீர்மின்னுற்பத்தி அதிகரிப்பு ஆகிய சாதகமான காரணிகளினால் மின்கட்டணத்தை அதிகளவான வீதத்தில் குறைக்குமாறு பல்வேறு தரப்பினர் வலியுறுத்தினார்கள். மின்சாரத்துறையின் முன்னேற்றத்தின் பயனை நாட்டு மக்களுக்கு முழுமையாக வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

மின்கட்டணத்தை இயலுமான அளவு குறைப்பதற்கு பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. பலர் சாதகமான யோசனைகளை முன்வைத்துள்ளார்கள். இதற்கமைய கடந்த ஒக்டோபர் மாதம் அதிகரிக்கப்பட்ட மின்கட்டணத்தை முழுமையாக இரத்து செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீட்டு மற்றும் மத தலங்களில் மின்கட்டணம் 18 சதவீதத்தாலும், கைத்தொழில்சாலைகள், ஹோட்டல்களுக்கான மின்கட்டணம் 12 சதவீதத்தாலும், அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கான மின்கட்டணம் 24 சதவீதத்தாலும் குறைக்கப்படும். திருத்தம் செய்யப்பட்ட மின்கட்டண திருத்த யோசனை இன்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவுக்கு முன்வைக்கப்படும்.

இலங்கை மின்சார சபை நடைமுறைக்கு சாத்தியமான வகையில் மறுசீரமைக்கப்பட வேண்டும். தேசிய வளங்களை பாதுகாப்போம் என்று போர்கொடி உயர்த்துபவர்கள் தமது சுய இலாபத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறார்கள். மின்சார சபை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மக்கள் உள்ளார்கள். ஆகவே உத்தேச மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் எதிர்வரும் மாதம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என்றார்.

## பணிபெண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கும் பயிற்றப்பட்ட வேலைகளுக்கு மட்டுமே தொழிலாளர்களை அனுப்ப வேண்டியது முக்கியத்துவமாகின்றது.

இதன்படி, பத்து வருடங்களுக்குள் வீட்டுப் பணிப்பெண்களை வெளிநாட்டு வேலைகளுக்கு அனுப்புவதை முற்றாக நிறுத்துவதற்கு, குறித்த துறையில் உள்ள சகல தரப்பினரையும் இணைத்து இந்தப் பிரேரணையை தன்னிடம் சமர்ப்பிக்குமறு அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் சங்கத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது தெரிவித்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## சஜித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்ற இடம்பெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தததாவது:

அரசமைப்பின் 123 (4)இன் பிரகாரம், ஏதேனும் சட்டமூலம் அல்லது ஏதேனும் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசமைப்புக்கு முரணானதாக உள்ளதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற விடத்து, அல்லது தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுமிடத்து, அத்தகைய சட்டமூலம் அல்லது அத்தகைய ஏற்பாடு உயர்நீதிமன்றத்தின் தீர்மானிப்பில் கூறப்பட்டுள்ள முறையில் தவிர, நிறைவேற்றப்படுதல் ஆகாது என குறிப்பிடப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகள் மூலம் இச்சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

நிகழ்நிலை காப்பு சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த பரிந்துரைகளில் 09 திருத்த யோசனைகள் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

அவ்வாறான குறைபாடு ஏற்பட்டுள்ளதாக சபாநாயகரும் ஒப்புக்கொண்டார். நிகழ்நிலை காப்பு சட்டம் இந்த சபையில் சட்டவிரோதமாக நிறைவேற்றப்பட்டது. இது முற்றிலும் முறையற்றது.

சபாநாயகருக்கு சரியான அறிவுரைகளை வழங்குவது அதிகாரிகளினதும் பொறுப்பாகும். இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யாவிட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படும். எனவே, இந்த குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்றார்.

## ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணவு மற்றும் விவசாய அமைப்பின் (குயுழு) பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

கலாநிதி கியூ டொன்கியூ இலங்கையின் காலநிலை நிலைத்தன்மையைப் பாராட்டியதுடன், 'இந்தத் தீவை இந்து சமுத்திரத்தின் பிரகாசமான நீர்த்துளி என்று அழைக்கலாம்' என்றார். அண்மைக் காலத்தில் ஏற்பட்ட முன்னெப்போதும் இல்லாத நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான பொருளாதார மீட்சி நடவடிக்கைகளை பாராட்டிய அவர், குறுகிய காலத்தில் இலங்கை மீண்டும் நடுத்தர வருமானம் பெறும் நாடாக மாறும் என நம்பிக்கை தெரிவித்தார்.

## அனைவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாரணர் ஜம்போரியில் 11,500 உள்நாட்டு, வெளிநாட்டு சாரணர்கள் பங்குபற்றினர். இம்முறை பெண்கள் சாரணர்களை பிரதிநிதித்துவப்படும் குழுவொன்றும் உள்வாங்கப்பட்டிருப்பதோடு, சிறுவர் சாரணர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

10 ஆவது தேசிய சாரணர் ஜம்போரிக்கு வருகைத் தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பிரதம சாரணர் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஜனப்பித் பெர்னாண்டோ ஜம்போரி கழுத்துப் பட்டி மற்றும் பதக்கம் அணிவித்து வரவேற்பளித்தார்.

இதன்போது தேசிய சாரணர் ஜம்போரியை முன்னிட்டு முத்திரையொன்று வெளியிடப்பட்டதோடு, மாவட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சஞ்சிகைகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கை சாரணர் இயக்கத்தின் உத்தியோகபூர்வ சீருடையை வழங்கும் நிகழ்வை அடையாளப்படுத்தும் வகையில் பிரதம சாரணர் சட்டத்தரணி ஜனப்பிரித் பெர்னாண்டோவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சீருடையை வழங்கப்பட்டது.

அதனையடுத்து இலங்கையின் பிரதம சாரணர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது. அதனையடுத்து 10 ஆவது சாரணர் ஜம்போரிக்காக அமைக்கப்பட்ட கூடாரங்களை ஜனாதிபதி பார்வையிட்டார்.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, சுவீடன், அவுஸ்திரியா, இங்கிலாந்து, பிரான்ஸ், போர்த்துக்கல், இந்தியா, தென் கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பாகிஸ்தான், பங்காளதேஷ், நேபாளம், மலேசியா, வியட்நாம், இந்துநேசியா உள்ளிட்ட 28 நாடுகளை பிரதிநிதித்துவப்படும் சாரணர்கள் 10 தேசிய சாரணர் ஜம்போரியில் பங்குபற்றியிருந்தனர்.

ஜம்போரி நடைபெறும் ஒவ்வொரு தினத்திலும் பல்வேறுபட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. வானவேடிக்கை, கலாச்சார அம்சங்கள் என்பவும் அதில் அடங்கும். நேற்று காலை 9 மணி முதல் மாலை 9 மணி வரையில் மக்கள் பார்வைக்காக ஜம்போரி திறக்கப்பட்டிருக்கும். அங்கு ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

10 ஆவது சாரணர்

தொடர்ச்சி 8ம் பக்கம்....




காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ பீடத்தில் தொழில் வாய்ப்புச் சந்தை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் தொழிற் சந்தை நிகழ்வு இன்று (புதன்கிழமை) காலை 9 மணி முதல் கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழிற்றுறைத் தொடர்பு மையம் மற்றும் தொழில் வழிகாட்டல் அலகு ஆகியவை இணைந்து நடத்தும் இந்தத் தொழில் வாய்ப்பு சந்தை- 2024 இற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இந்தத் தெழில்வாய்ப்பு சந்தையின் பிரதான நோக்கமாக அமைவது நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கான பயிற்சி வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதாகும். இந்தத் தொழில் வாய்ப்புச் சந்தையில் கணக்கியல், நிதியியல், மனிதவள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழிநுட்பம் , தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 43 தொழில் வழங்குநர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன், சுமார் 800 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு தமது தொழில் வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தவிர, தொழில் தேடும் இளைஞர், யுவதிகள், உயர் தொழில் நுப்வியல் நிறுவன மாணவர்கள் உப்பட ஆர்வமுடைய சகலரும் பங்குபற்றிப் பயனடைய முடியும் என்றும், சமீபத்தில் தமது பீடத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தொழிற்றுறை நிறுவனங்களுடன் மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் தொடர்புகளை விருத்தி செய்தல் என்பன இத் தொழில் வாய்ப்புச் சந்தையின் துணை நோக்கங்களாகக் காணப்படுகின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (05)




# 200 பேர் பயணிக்கும் வகையில் உள்ளூரில் தயாரிக்கப்பட் கப்பல் வெள்ளோட்டம்

இலங்கையின் தொழிநுப்ப, தொழில்முனைவோரின் ஆற்றலை உலகிற்கு வெளிப்படுத்தும் வகையில், மஹாசென் மரைன் தனது சமீபத்திய தயாரிப்பான ஈசிகியு80 பாரிய பயணிகள் படகினை காரைநகர் படகு முற்றத்தில் இருந்து யாழ்ப்பாணம் கடற்பரப்பு களப்பில் செலுத்தி அறிமுகப்படுத்தியது.

80 அடி நீளமும், 30 அடி அகலமும், சுமார் 40 தொன் எடையும் கொண்ட இந்தக் கப்பல், ஒரே நேரத்தில் 200 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடியதாகவும், முழுமையாக குளிரூட்டப்பட்ட, சுகாதார வசதிகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்ப உணவகம் அல்லது சொகுசு வசதிகளுடன் அமைக்கபபடக் கூடியதாகவுள்ளது.

அனைத்து மின்சாரத் தேவைகளையும் 48 சோலர் பனல் மூலமாக பூர்த்தி செய்யக்கூடியதாக அமைந்துள்ளது.

தெற்காசியாவில் வேகமான பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட பங்களாதேஷின் சுற்றுலாத் துறை தொடர்பான நிறுவனம் ஒன்றிற்காக மகாசென் மரைன் இந்த கப்பலை 06 மாத குறுகிய காலத்திற்குள் வடிவமைத்து தயாரித்துள்ளது.

உள்ளூர் பொருளாதார நெருக்கடிக்கு சிறந்த தீர்வாக இந்த உற்பத்தித் திட்டத்தைத் தொடர்வது மிகவும் முக்கியமானதாக இருக்கும்.

நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வரும் சுற்றுலாத் துறையின் பன்முகத்தன்மை மற்றும் நவீனமயமாக்கலுக்கு இந்த அறிமுகம் மிகவும் முக்கியமானது என மஹாசென் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி அவந்த அதபத்து தெரிவித்தார். (05)

# நீர்கொழும்பு பிட்டிப்பனை மீன் விற்பனை நிலையம் கையகப்படுத்தலுக்கு எதிர்ப்பு



நீர்கொழும்பு பிட்டிப்பனை ஐக்கிய மீனவர் சங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மீன் விற்பனை நிலையத்தை கையகப்படுத்த மேற் கொள்ளப்படும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நீர்கொழும்பு பொருதொட்ட, கம்மல் தோட்டை மீனவர்கள் பதாகைகளையும் கறுப்புக் கொடிகளையும் பறக்கவிட்டு எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். (05)

# கச்சதீவு புறக்கணிப்பு

கச்சதீவு திருவிழாவில் இம்முறை இந்தியாவில் இருந்து பக்தர்கள் எவரும் பங்கேற்க வேண்டாம் என கச்சத்தீவு திருப்பயன ஒருங்கிணைப்பாளர் வேர்க்கோடு பங்குத்தந்தை சந்தியாகு கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை இந்திய பக்தர்களின் உறவு பாலமாக உள்ள கச்சத்தீவு புனித அந்தோணியார் கோயில் திருவிழா இந்த ஆண்டு 23 மற்றும் 24 திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில், சிறையில் உள்ள நான்கு இந்திய மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருவதுடன் கச்சத்தீவு திருவிழாவை புறக்கணிப்பதாக தீர்மானம் நிறைவேற்றி இருந்தனர். அதனடிப்படையில் தொடர் வேலை நிறுத்த போராட்டம் காரணமாக படகுகள் இயக்கப்படாததால் இந்த ஆண்டு திருப்பயணத்தை ரத்து செய்வதாக கச்சத்தீவு திருப்பயன ஒருங்கிணைப்பாளர் வேர்க்கோடு பங்குத்தந்தை சந்தியாகு தெரிவித்துள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் அந்த செய்தியில், வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து வரக்கூடிய திருப்பயணிகள் தயவு செய்து கச்சதீவுக்கு பயணிக்க வேண்டாம் எனவும் அவர்கள் கொடுத்த பணத்தை விரைவில் திருப்பிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்திருப்பதாகவும் தெரிவித்தார் - எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உயிரிழந்துள்ளார்



யாழ் நீர்வேலி பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் யாழ். பல்கலைகழக 1ம் வருட கலைப்பிரிவு மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாய் - வேம்படி பகுதியை சேர்ந்த ரமேஷ் சகீந்தன் (வயது 22) என்ற மாணவனே விபத்தில் உயிரிழந்துள்ளார். இன்று அதிகாலை தனது வீட்டிலிருந்து நர்வேலி நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது வீதியின் குறுக்கே பாய்ந்த நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த மாணவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 53 வருடங்களின் பின் தரமுயர்வு பெற்ற பாடசாலையில் தரம் 10 இல் புதிய மாணவர்களை இணைக்கும் நிகழ்வு



(மூதூர் நிருபர்)

மூதூர் கல்வி வலயத்திற்குப்பட்ட திஃமூஃ செல்வ நகர், அந்நூர் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 53 வருடங்களின் பின் இப்பாடசாலை தரமுயர்த்தப்பட்டு இங்கு தரம் 10 இல் கல்வி கற்பதற்கு புதிதாக மாணவர்களை இணைத்துக்கொள்ளும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வு பாடசாலை அதிபர் கே.எம். எம்.றிஸ்மி தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இப்பாடசாலையில் இதுவரை தரம் 1 முதல் தரம் 9 வரையான வகுப்புகளிலேயே மாணவர்கள் கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் காணப்பட்டன. இப்பாடசாலை தரமுயர்த்தப்பட்டதன் விளைவாக

இனி மாணவர்கள் இங்கு தரம் 1 முதல் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்பதற்கான வாய்ப்பு இதன் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மூதூர் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி முனவ்வரா நளீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு புதியவகுப்பறையைத் திறந்துவைத்து மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களையும் இதன் போது வழங்கிவைத்தார். கோட்டக்கல்விப்பணிப்பாளரும் , தோப்பூர் பாத்திமா மகளீர் கல்லூரி அதிபருமான ஏ.பி.ஏ.ஜப்பார் , மூதூர் வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள் , பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர்கள் ஊர்ப்பிரமுகர்கள் பெற்றோர்கள் பழையமாணவர்கள் பாடசாலை மாணவர்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இங்கு நடைபெற்றது.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் பாடசாலையில் முதலாவது இணைத்துக்கொள்ளப்பட்ட முதல் சேர்விலக்கத்தைக்கொண்ட மாணவரான ஓய்வு பெற்றுள்ள கிராம சேவையாளரான மூமீன் இப்பாடசாலையின் முதல் மாணவராவார். அவரும் , இந் நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தமை மற்றுமோர் விசேட அம்சமாகும். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காத்திருக்க வேண்டியிருக்கும்

தேர்தல்கள் நெருங்கி வரும் நேரத்தில் மீண்டும் இந்திய எதிர்ப்பு அரசியல் பெரும்பான்மை தீவிர சிங்களத் தேசியவாதிகளால்முன்னெடுக்கப்படத்தொடங்கியிருக்கிறது. அவர்கள் இப்போது இந்தியாவுடனான 'எட்கா' ஒப்பந்தத்தை எதிர்க்கிறார்கள். அது மட்டுமல்ல இலங்கை அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவது என்கிற பெயரில் இந்தியாவிற்குத் தாரை வார்ப்பது குறித்தும் அவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய நாடளுமன்ற உறுப்பினர் விமல வீரவன்ஸ இது விடயத்தில் ஆளும் தரப்பைக் கடுமையாகச் சாடி இருந்தார்.

டெலிகொம் நிறுவனம் இந்தியாவுக்கு, மின்சார சபையைப் பிரித்து அதுவும் இந்தியாவுக்கு, மன்னாரில் காற்றாலைகள் இந்தியாவுக்கு, விமான நிலையங்களும் இந்தியாவுக்கு, ஆள் அடையாள அட்டையை வழங்கும் பணியும் இந்தியாவுக்கு, பின்னர் எதுதான் இங்கு எஞ்சியிருக்கும்? இந்த நாடாளுமன்றமா? இவற்றுடன் 'எட்கா' ஒப்பந்தத்தினையும் செய்து கொண்டால் இலங்கை என்று ஒன்றுமே இருக்காது. நாட்டின் இறைமையை மீட்டதாகக் கூறும் ராஜபக்ச வீரர்கள் இந்தக் காட்டிக் கொடுப்புக்கு வெட்கமில்லாது துணைபோகின்றார்கள் என்று கடுமையாகச் சாடி இருந்தார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல்வீரவன்ச.

69இலட்சம்மக்களின்ஆணையால்நாடாளுமன்றத்துக்கு வருகைதந்தமொட்டுக்கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர்கள் என்ன செய்கின்றார்கள்? சிங்கங்களாக தம்மை உருவகித்த பிரதமர் தினேஷ் குணவர்த்த உள்ளிட்டவர்கள் பூனைக்குட்டிகளாக தங்களை உருவகிக்கின்றார்கள். இறைமையை இழக்கும் குற்றத்துக்கு ராஜபக்சக்கள் அனைவரும் துணைபுரிகின்றார்கள்.

டெலிக்கொம் நிறுவனத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கவுள்ளனர். மின்சார சபையையும் துண்டுகளாகப் பிரித்து இந்திய நிறுவனத்துக்கு வழங்கவுள்ளனர். மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தி நிறுவனத்தின் அதிகாரத்தினை அதானிக்கு வழங்குகின்றனர்.

எமது மூன்று விமான நிலையங்களை இந்தியாவுக்கு வழங்குவதாக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவே கூறுகின்றார் அல்லவா. அப்படியாயின் இறுதியில் எது எஞ்சியிருக்கும். இறுதில் இந்தப் நாடாளுமன்றமா எஞ்சியிருக்கும்? அதனையும் வழங்கி விடுங்கள். அவ்வாறு வழங்கிவிட்டால் எதுவுமே எஞ்சியிருக்காது.

எட்டகா உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளீர்கள். அந்த உடன்படிக்கையை அமைச்சரவை அங்கத்தவர்கள்கூடக் காணவில்லை. அதற்கென தனியானதொரு அலுவலகம் அமைக்கப்பட்டு செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரைக் காண்பதற்காகச் சென்ற தொழில் வல்லுநர்கள் குழுவுக்கு எதுவும் வழங்கப்படவில்லை. அவருடைய பதில் இந்தியா இம்முறை முன்னாயர்த்தமாக உள்ளது என்பதே .

தற்போது எமது அடையாள அட்டையை இந்தியாவே வழங்கவுள்ளது. இதன் மூலம் இந்தியா தரவுக்கட்டமைப்பை பெற்றுக்கொள்ளவுள்ளது. அதேபோன்று மில்கோ நிறுவனத்தினை அமுலுக்கு வழங்கவுள்ளார்கள். அதன் பின்னர் எட்கா ஒப்பந்தத்தினையும் செய்து கொண்டால் இலங்கை என்று ஒன்றுமே இருக்காது. இந்த செயற்பாடுகளை முன்னெடுத்துக்கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் நிகழ்ச்சி நிரலை அனுமதித்து அதனைப்பார்த்துக்கொண்டிருப்பதாமொட்டுக்கட்சியினரின் கடமை. நாட்டின் இறைமையை மீட்டதாகக் கூறும் ராஜபக்ச வீரர்கள் இந்தக் காட்டிக் கொடுப்புக்கு வெட்கமில்லாது துணைபோகின்றார்கள். அவர்களுடைய நாய்க்குட்டிகள் மௌனமாக இருக்கின்றார்கள் என்றெல்லாம் அவர் கடுமையாகச் சாடி உள்ளார்.

நாடாளுமன்றில் உள்ள மற்றொரு தீவிர கடும்போக்குவாதியான நாடாளுமன்ற உறுபப்பனர் சரத் வீரசேகரவும் இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தை தாக்கிப் பேசியிருந்தார். அதுமட்டுமல்ல மல்வத்துபீட மகாநாயக்கரும் அரசின் தனியார் மயப்படுத்தல் தொடர்பாக அரசுத் தலைவரிடமே முறையிட்டிருந்தார்.

இப்படி தீவிரப் போக்குடைய சிங்களத் தலைமைகள் மீண்டும் இந்தியாவை எதிர்க்கும் அரசியலைச் செய்யத் தொடங்கியிருக்கின்றது. இந்தியாஎன்னதான் இலங்கைக்கு உதவினாலும் இந்தியாவை விரோதியாகப் பார்க்கும் மனநிலையில்இருந்துசிங்களபௌத்தமக்கள்விலகுவதற்கு இன்னும் நீண்ட காலம் காத்திருக்கவேண்டியிருக்கும்.

# அடுத்தது என்ன?

என்.விஜேயன்



ஒரு வழியாக தமிழரசு கட்சியின் தலைவர் தேர்தல் நடந்து முடிந்து சிறிதரன் வெற்றி பெற்றார். (நீதிமன்ற வழக்குகள் காரணமாக அவர் இப்போது தலைவராக இல்லாமல் இருப்பது வேறுவிடயம்) வாழ்த்துக்கள். ஆனால் அதற்குப் பின்னரும் கட்சி அமைதியாக இல்லை. எங்கு உதைத்தது?

சுமந்திரன் தலைவர் ஆனால் தமிழ் தேசியம் ஒழிந்து விடும் என்று எதிர்வினை (negative) பரப்புரை செய்து வாக்குகளை பெற முயன்றபோதுதான் எல்லாமும் சிதையத் தொடங்கின. அதுவரையில் எல்லாமும் நன்றாகத்தான் போய்க்கொண்டிருந்தன. இந்த உத்தி பொதுவாக தென்னிலங்கைத் தலைவர்கள் சிங்கள பௌத்த வாக்காளர்களை வசப்படுத்த ஒவ்வொரு தேர்தல்களிலும் பாவிப்பதுதான்.

மாறாக நான் தலைவர் ஆனால் இன்ன இன்ன விடயங்களை செய்து முடிப்பேன் என்று தெளிவாகப் பரப்புரை செய்து வென்றிருப்பார்களானால் அது பிரச்சினைகளுக்கு வழியேற்படுத்தியிருக்காது. இந்தத் தோல்வி சுமந்திரனுக்கு எதை உணர்த்துகிறது என்றால் ஒரு கட்சியில் பொறுப்பில் உள்ளபோது அனைவரையும் அரவணைத்து செல்ல வேண்டும் என்பது மட்டுமல்ல சகல முயற்சிகளும் வெளிப்படைத்தன்மையுடனும் அனைவரின் சம்மதத்துடனும் முன்னெடுத்து செல்லப்பட வேண்டும் என்பதையும்தான்.

தன்னிச்சையான எழுந்தமானமான நடவடிக்கைகள் அவரை புறந்தள்ளி விடும் என்பதே அவர் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம். என்னதான் நல்ல முயற்சியாக இருந்தாலும்கூட. மனந்திறந்து அவர் உதிர்த்த கருத்துக்களையே அவருக்கு எதிராக அவரது கட்சிக்காரர்களே பயன்படுத்திக்கொண்டனர். மகாத்மா காந்தி வன்முறையை ஆதரிக்கவில்லை என்று கூறினாலும் இந்திய மக்கள் அவரின் தலைமையை ஏற்றுக்கொண்டது போல் , சுமந்திரன் ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை என்று கூறியதை நம்மவர்கள் சிலர் அவருக்குச் சேறு பூசும் முயற்சிக்கு பயன்படுத்திக் கொண்டார்கள்.

என்னதான் நியாயமான போராட்டமாக இருந்தும் பல இளைஞர் யுவதிகளின் தியாகங்களால் வளர்த்து எடுக்கப்படாடாலும் புலிகளின் தலைமை பூகோள யதார்த்தங்களை கணக்கெடுக்க தவறியதால் பேரழிவைச் சந்தித்தது. இறுதியில் அழிவுகள் மட்டுமே எஞ்சின. இவ்வளவு அழிவுகளுக்கு பின்பும் ஒரு கூட்டம் பழைய பெருமை பேசி மக்களை உசுப்பேற்றி கொண்டே இருக்கிறது. இவர்களுக்கு மாற்றுக் கருத்துகள் - என்னதான் நியாயமாக இருந்தாலும் ஏற்புடையதல்ல.

சில யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளும் இதே போக்கையே கடைப்பிடிக்கின்றன. இதை சுமந்திரன் மனதில் இருத்துதல் நல்லது. அதாவது கொள்கைகளை புறந்தள்ளி பெருங்குரல் எழுப்பி வேஷம் போடுபவர்களே தற்போது இங்கு தலைவர்களாக வரமுடியும். இவர்களுக்கு ஆர்.எஸ்.எஸ். பின்புலம்கொண்ட ஒரு சிலரும் வேறு உள்நோக்கங்களுக்காக ஆதரவு அளிக்கிறார்கள். ஆயினும் சுமந்திரனுக்கு கிடைத்த 137 வாக்குகள், யதார்த்த, மிதவாதிகள் இன்னும் பெருமளவில் நம்மிடையே உள்ளார்கள் என்பதையும் உணர்த்துகிறது. இது ஒரு ஆறுதல் தரும் விடயமாகும்.

பிரச்சினை என்னவென்றால் மழைவிட்டும் தூறல் விடாததது போல் இருதரப்புக்கும் இடையே வெட்டுக் குத்துகள் தொடர்கின்றன. குடுமிப்பிடி சண்டைகளும், பொய்ப் பரப்புரைகளும், வழக்குகளும் சந்தி சிரிக்கின்றன. இதுவரை வடக்கு ஏள கிழக்கு என்றிருந்த உரசல் தற்போது கிழக்கு ஏள கிழக்காகவும் விரிவடைந்துள்ளது, தலைவிதி, இது ஈழத்தமிழர்களின் பாரம்பரியம்.

சரி இனி சிறிதரன் என்ன செய்யப் போகிறார் என்பதே எல்லோருடைய கேள்வியும். அவருடைய தலைமைத்துவ பண்புகளை நிரூபித்து மீண்டும் கட்சியை தலைநிமிர வைப்பாரா அல்லது பிரித்தாளும் (னளைனைந யனெ சரடந) தந்திரத்தை கடைப்பிடித்து காலத்தை ஓட்டுவாரா என்று பார்க்கலாம். சிறீதரன் தெரிவினால் தென்னிலங்கையில் உள்ளவர்கள் குழம்ப ஆரம்பித்து விட்டார்கள் என்பது கொழும்பு பத்திரிகைகளில் வரும் கட்டுரைகளில் இருந்து தெரிய வருகிறது. ஒரு கடும்போக்குவாதி (ராயசனடைநைச) தமிழரசு தலைவராக வந்ததை அவர்கள் ரசிக்கவில்லை. கட்சியை இந்த நிலைக்கு தள்ளியது தென் இலங்கை கட்சிகள் தான்.

போர் முடிந்த பின்னர் 13, என்று உறுதியளித்த மகிந்த பின்னர் அதை கிடப்பில் போட்டு சொத்து சேர்ப்பதிலேயே குறியாக இருந்தார். நல்லாட்சி ரணிலோ, புதிய அரசமைப்பு என்று வழக்கம் போல் காலத்தைக் கடத்தினார். என்ன சோகம் என்றால் விதைப்பது அவர்கள், வினை அறுப்பது நாங்கள் என்றாகிவிட்டது. எனவே புதிய தலைவர் என்ற வகையில் சிறிதரன் ஏனைய மத்திய குழு உறுப்பினர்களுன் சேர்ந்து பின்வரும் சமூக பொருளாதார விடயங்களையும் முன்னெடுக்க வேண்டும்.

1-. புதிய இளைஞர் யுவதிகளை பொதுக்குழுவிற்குள் உள்வாங்கி குறைந்த பட்சம் தகுதி வாய்ந்த படித்த 3 இளைஞர்களையும் 3 யுவதிகளையும் நாடாளுமனறத் தேர்தலில் நிறுத்தி வெற்றி பெற வைக்க வேண்டும். 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு சந்தர்ப்பம் வழுங்க பட கூடாது. அவர்கள் கட்சிப்பணி வேண்டுமானால் செய்யலாம்.

2.- உரிமைக்காகப் போராடுவது என்றால் பிரதேசத்தின் அபிவிருத்தி தேவைகளை பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்று ஆகாது. 30 வருடங்களில் போரில் இழந்தது மக்களை மட்டுமல்ல, பிரதேசத்தின் பொருளாதார வலிமையையும்தான். டக்ளஸ் மட்டும் அள்ளி எடுத்தாலும் ஏதோ கிள்ளிக் கொடுக்கிறார். பிள்ளையான், வியாழேந்திரன் கருணா போன்றோரின் தகிடுதத்தங்களை எல்லோரும் நன்கு அறிவர்.

கூட்டமைப்பின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களோ அபிவிருத்தி திட்டங்களை பற்றி கண்டுகொள்வதே இல்லை. வடக்கிற்கும் கிழக்கிற்கும் தலா இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை அபிவிருத்தி தொடர்பான தேவைகள், திட்டமிடல், மற்றும் அமுல்படுத்தலிற்கு அரசுடனும் தனியார் துறையுடனும் சேர்ந்து இயங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள நியமிக்க வேண்டும். இதன்மூலம் நமது பிரதேசங்களில் உள்ள வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது மட்டும் அல்லாது குடும்பங்களின் வருமான உயர்விற்கும் வழி வகுக்க வேண்டும். மேலும் இவை நம் இளைஞர்களின் வெளிநாட்டு மோகத்தை தணிக்கவும் வழிவகுக்கும்.

3- நவீன முறையில் வடக்கு கிழக்கின் விவசாயத்துறை முன்னேற்றத்திற்கு அடித்தளமிட வேண்டும். முக்கியமாக தண்ணீர் தட்டுப்பாடு உள்ள பிரதேசங்களில் சொட்டு நீர்ப்பாசன முறையை (னசனி சைசபையவழைெ) முடிந்தளவு அறிமுகப்படுத்த வேண்டும். மோட்டர் பம்ப் வைத்து இறைப்பதனால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைவதுடன் இதில் பாதிக்கு மேல் ஆவியாகப் போய்விடும். கடலை அண்மித்த பகுதி கிணறுகளில் உவர் நீர் உப்புகும். அத்துடன் குளங்கள், நீர்ப்பாசன கிணறுகளை இரண்டு வருடங்களில் ஒரு தடவையாவது தூர்வாரி மழைநீரை அதிகளவில் தக்க வைக்க வேண்டும்.

பாலி ஆற்று திட்டம், தொண்டமானாறு திட்டங்களும் முழுவீச்சில் செயற்படுத்துதலும் இந்த ஆறுகளின் முடிவுப் புள்ளிகளில் பெரும் நீர்த்தேக்கங்களை உருவாக்குவதும், மழைநீரானது கடலுக்கு சென்று வீணாகுவதை குறைக்கும். மன்னர் ஆட்சி காலத்தில் இவற்றை உருவாக்க முடியும் என்றால் வெளிநாட்டு உள்நாட்டு நிபுணர்கள் உதவியுடன் இதை தற்போது இலகுவாக செய்து முடிக்கலாம். மேலும் வீடு தோறும் மழை நீர் சேமிப்பு திட்டங்களை செயற்படுத்தினால் குடிநீர் பிரச்சினையை பெருமளவில் குறைக்கலாம். பாரம்பரிய விவசாயப்பயிர்களுடன் புதிய பணப் பயிர்களை பயிரிடுவது விவசாயிகளின் வருமானத்தையும் வாழ்க்கை தரத்தையும் உயர்த்தும். கிளிநொச்சியில் ஒரு விவசாயி பச்சை ஆப்பிள் செய்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி உள்ளார். முன்னாள் பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணத்தின் தனிப்பட்ட முயற்சியால் இஸ்ரேலில் இருந்து திராட்சை செடிகள் அறிமுகப்படுத்தப் பட்டன. ஆனால் அவருக்கு பின் யாரும் புதிய முயற்சிகளை பெரிதாக மேற்கொண்டதாக தெரியவில்லை.

விதையில்லா திராட்சைகள் , ஆரஞ்சு பழ மரங்கள், மற்றும் பேரிச்சம் பழச்செய்கை போன்றவற்றை பயிரிட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக பேரிச்சையானது மிகக் குறைந்த நீர்ப்பாசனத்துடன் வெற்றிகரமாக நமது தரிசு நிலங்களில் பயிரிடலாம். இது சிறந்த பணப் பயிரும்கூட. தமிழ்நாட்டில் ஒரு விவசாயி பேரிச்சம் பழச்செய்கையில் மிக வெற்றி பெற்று ஏற்றுமதிகூட செய்கிறார். (7ஆம் பக்கம் பார்க்க..)

# கடன்களை திருப்பிச் செலுத்தல் 13 சதவீதத்தால் குறைவடைவு

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்



வாடிக்கையாளர்கள் வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களை மீள் செலுத்தும் வீதம் 13 சதவீதத்தால் குறைவடைந்துள்ளன. நிதி நிலைமை தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களை மறுசீரமைப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து மத்திய வங்கி விசேட கவனம் செலுத்தியுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி யாளர்கள் எதிர்க்கொண்டுள்ள பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர ணியின் உறுப்பினர்கள் முன்வைத்த கேள்வி களுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு - பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் ஒரு தரப்பினர் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் குறித்து மாத்திரம் விசேட கவனம் செலுத்த முடியாது. ஒட்டுமொத்த மக்களின் நலனையும் கருத்திற் கொண்டு தான் நிதி நிலைமை குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டின் வங்கிக் கட்டமைப்பைப் பாதுகாத்துக் கொள்வது அத்தியாவசியமானது. வாடிக்கையாளர்கள் வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட வணிக கடன்களை மீள் செலுத்தும் வீதம் 13 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. நாட்டில் 5 கோடியே 75 லட்சம் வங்கி வைப்பாளர்கள் உள்ளனர்.

இவர்களில் 60 சதவீதமான வைப்பாளர்கள் 5,000 ரூபாவுக்கும் குறைவான வைப்புக்களை-யே வைத்துள்ளனர். ஆகவே, நிதி நிலைமை தொடர்பில் தற்போது மறுசீரமைப்புக்கள் ஏதேனும் செய்தால் அதனால் ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்படுமா என்பது குறித்து மத்திய வங்கி விசேட கவனம் செலுத்தியுள்ளது. - என்றார். (05)

# தொழுநோயை கட்டுப்படுத்த இலங்கை வருகிறது உலக சுகாதார நிறுவனம்

தொழுநோயை முற்றாகக் கட்டுப்படுத்தும் நோக்கில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசேட வைத்திய குழுவொன்று எதிர்வரும் மார்ச் மாதம் நாட்டிற்கு வருகை தரவுள்ளது. நாட்டில் அடுத்த 10 ஆண்டுகளில் தொழுநோயை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கான வரைபடத்தை உருவாக்க இந்த குழு சுகாதார அதிகாரிகளுக்கு உதவும் என தொழுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது. நாட்டில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தொழுநோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பிரசான் ரணவீர தெரிவித்துள்ளார். இலங்கையிலிருந்து தொழுநோயை முற்றாகக் கட்டுப்படுத்தற்கான விரிவான வேலைத்திட்டத்தை நாங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம்.

இந்த முயற்சிக்கு உதவுவதற்காக விசேட வைத்திய குழுவை மார்ச் மாதம் இங்கு அனுப்புவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எங்களுக்கு அறிவித்துள்ளது. அவர்கள் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் தொழுநோயை முற்றாகத் தடுக்க ஒரு வரைபடத்தை உருவாக்குவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# ஆபத்தான நிலையிலுள்ள கட்டபறிச்சான் பாலத்தை புனரமைத்துத்தர கோரிக்கை



(மூதூர் நிருபர்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மூதூர் கட்டபறிச்சான் பாலம் மிக நீண்டகாலமாக சேதமடைந்து அதன் வலிமை தன்மை குறைந்த நிலையில் உடையக்கூடிய ஆபத்தான நிலையில் காணப்படுவதால் இதனை புனரமைத்துத்தருமாறும் இப்பகுதி பொதுமக்கள் உரிய பகுதியினரிடம் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

இப்பாலத்தினூடாகவே மூதூருக்கு சம்பூர் சேனையூர் கட்டபறிச்சான் கடற்கரைச்சேனை பள்ளிக்குடியிருப்பு நல்லூர் வீரமா நகர் பாட்டாளிபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் நாளாந்தம் பயணம் செய்துவருகின்றனர்.

இப்பாலம் யுத்தகாலத்தில் சேதமடைந்தாகவும் பொதுமக்கள் கூறுகின்றார்கள். இப்பாலத்தினூடாக பார ஊர்திகள் கனரக வாகனங்கள் செல்வதற்கு தடைசெய்யப்பட்ட பெயர்பலகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தும் கனரக வாகனங்கள் பார ஊர்திகள் செல்வதைக் காணமுடிவதாகவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இப்பாலத்தினூடாக பிரயாணம் செய்யும்போது தாம் அச்சப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சேதமடைந்து காணப்படும் இப்பாலத்தை பொதுமக்களின் நன்மை கருதி புனரமைத்துதருமாறு பொதுமக்கள் உரிய வர்களிடம் கோருகின்றனர். (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# சம்மாந்துறை 9 ஆம் கிராம சேவகர் பிரிவுக்கான முஸ்லிம் காங்கிரஸ் கிளை புனரமைப்புக் கூட்டம்



(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை 09 ஆம் கிராம சேவகர் பிரிவுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை புனரமைப்புக்கூட்டம் செவ்வாய்க்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம். மன்சூர் தலைமையில் சம்மாந்துறையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன்,- அரசியல் அதி உயர் பீட உறுப்பினர் ஏ.எம்.ஏ.அஸீஸ், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.நளீம் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (05)

# ராகம பகுதியில் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் உயிரிழப்பு

ராகம பகுதியில் நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ராகம, எலப்பிட்டிவல சந்தியில் உள்ள இறைச்சிக் கடையொன்றுக்கு அருகிலேயே நேற்று காலை 7.15 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 39 வயதுடைய ஹெட்டி ஆராச்சிகே டொன் சுஜித் என அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான 'வெல்லே சாரங்க' வின் உறவினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் கந்தானை பகுதியில் வசிப்பதோடு, குறித்த இறைச்சி கடையின் உரிமையாளரும் ஆவார்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ராகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வெளிநாட்டுச் சிகரெட்டுகளுடன் இருவர் கட்டுநாயக்காவில் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளுடன் இருவர் கட்டுநாயக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது இவர்கள் கைதாகியுள்ளார்கள்.

இவர்களிடமிருந்து நாற்பத்து மூன்று லட்சத்து நாற்பத்து இரண்டாயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு பொரளை பகுதியில் வசிக்கும் 29 வயது மற்றும் 25 வயதுடைய இருவரும் சட்ட விரோதமாக வெளிநாட்டுப் பொருள்களை இலங்கைக்குக் கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)






## அனைவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜம்போரி திருகோணமலையில் நடைபெறுகிறது. அனைத்து மாவட்டங்களிலிருந்தும்சாரணர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். இதில் பங்கேற்றுபவர்கள் பாடசாலை, மதம், இனம் என்ற அடிப்படையில் பங்கேற்றவில்லை. இலங்கையின் சாரணர்கள் என்ற வகையிலேயே பங்கேற்றுள்ளனர்.நாம்அனைவரும் இலங்கையர்கள்.

இங்கு வருகைத் தந்திருக்கும் அனைவருக்கும் நன்றி. தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரையான மிகப்பெரிய வலைமைப்பை நீங்கள் உருவாக்கியுள்ளீர்கள். அதேபோல் கொழும்பு முதல் திருகோணமலை வரையில் நட்பு விரிவடைகிறது. உங்களுடைய ஒற்றுமைவலுவடைகிறது. அதனால் இந்த ஜம்போரியினால் சிறப்பான பணியாற்றப்படுகிறது.

சாரணர் இயக்கத்தினால் நாட்டுக்கு நல்ல பிரஜைகள் உருவாக்கப்படுகின்றனர். பிரதம சாரணராகபொறுப்பேற்றுக்கொண்ட போது சாரணர் எண்ணிக்கையை 2 இலட்சமாக அதிகரிக்க முடியுமா என்றுவினவினேன்.அதனைசெய்ய முடியுமென சாரணர் பணிப்பாளர் தெரிவித்தார்.

அதன்படி அனைவரும் ஒன்றுபட்டு சாரணர் இயக்கத்தை பலப்படுத்தவேண்டும். எதிர்காலத்தில் அந்த எண்ணிக்கையை இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரமாக அதிகரித்துக்கொள்ள வேண்டும். அதற்கான போதிய வளம் இல்லாத பிரச்சினை காணப்பட்டது. சாரணர் இயக்கத்தில் 2 இலட்சம் பேர் இணைக்கப்பட்டவுடன் இதற்காக வழங்கப்படும் நிதித் தொகையை அதிகரிக்க எதிர்பார்க்கிறோம். இருப்பினும் அதற்கான திட்டமிடலொன்று அவசியம்.

அதேபோன்று, இதுபோன்ற அமைப்புகள்மூலம்புதியஅறிவையும் புதியதொழில்நுட்பத்தையும்வழங்க முடியும். மேலும், அடுத்த ஆண்டு தேசியசாரணர்ஜம்போரியின்போது செயற்கை நுண்ணறிவை வழங்க முடியும். இந்த சாரணர் இயக்கத்தை நாம் புதிய அறிவை வழங்கும் ஒரு வழியாகபயன்படுத்தலாம். எனவே, சாரணர்இயக்கத்திற்குதொழில்நுட்ப அமைச்சுடன் இணைந்து பணியாற்றுவதற்கானவாய்ப்புகளை வழங்க எதிர்பார்க்கிறேன்.

விவசாய நவீனமயமாக்கல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற துறைகளை இந்த சாரணர் இயக்கத்துடன் இணைக்க எங்கள் ஆதரவை வழங்க இருக்கிறோம். சாரணர்இயக்கத்தினால்நாட்டுக்காக உங்கள் கடமையைச் செய்வீர்கள் என்றுநம்புகிறோம். இப்போதைக்கு அதைச் செய்துவிட்டீர்கள். எதிர்காலத்தில் இது இன்னும் வலுவாக செய்யப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

சாரணர்கள் மட்டுமின்றி அனைவரும் நாட்டுக்காக தமது பொறுப்பை செய்ய வேண்டும். நம் அனைவரம் அதனை நிறைவேற்றுகிறோமா என்ற கேள்வி எம்முன் இருக்கிறது. அதை அரசில்வாதிகள்நிறைவேற்றுவார்களா என்பதுதான் பிரச்சினை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் அனைவரும் கஷ்டங்களை எதிர்கொண்டோம். மின்சாரம் இருக்கவில்லை, எரிபொருள் இருக்கவில்லை,விவசாயத்திற்கு அவசியமானஉரம்இருக்கவில்லை. மூன்று வேளைக்கும் போதுமான உணவு இல்லை. நாங்கள் மிகவும் கடினமானகாலகட்டத்தைகடந்தோம். நம் நாடு வங்குரோத்தடைந்தது. ஆனால்தற்போதுஅந்தவங்குரோத்து நிலையில் இருந்து படிப்படியாக வெளியேறி வரமுடிந்துள்ளது. மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்கினாலும்இன்னும்கஷ்டமான நிலைமை இருக்கிறது. ஆனால் நாட்டை வெற்றிபெறச் செய்ய வேண்டுமானால் நாம் இந்தப் பாதையில் தொடர வேண்டும்.

நாட்டைவங்குரோத்துநிலையில் இருந்து மீட்ட பிறகு, அடுத்த தலைமுறைக்கு இதனைவிடசிறந்த நாட்டைஉருவாக்குவதுதான்நம் அனைவரினதும் கடமை. இந்த நிலைமீண்டும்ஏற்படாதவகையில் நாடுகட்டியெழுப்பப்படவேண்டும். அரசியல்வாதிகள்அதற்குஇன்னும் தயாராக இருக்கிறார்களா என்ற கேள்வி நம்முன் இருக்கிறது.

அதனால் அனைவரும் இணைந்து இந்தப் பயணத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நாம் அனைவரும் ஒன்றிணைந்தால் இன்னும் 10-15 வருடங்களில் சிறந்த நாட்டை உருவாக்க முடியும். இந்த நாட்டின் வருங்கால சந்ததியினருக்கான நமது கடமையாக நான் அதனைக் குறிப்பிடுவேன். தேசிய சாரணர் ஜம்போரிக்குஎனதுவாழ்த்துக்களை மீண்டும்தெரிவித்துக்கொள்கிறேன்

## காஸாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலப்படுத் திக்கொள்வதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஹுசைன் அமீர் அப்துல்லாஹியன், இலங்கையின் சுற்றுலா வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக ஈரான் அர்ப்பணிப்புடன் செயற்படுமெனவும்உறுதியளித்தார்.

ஈரான் - இலங்கை பொருளாதார ஒத்துழைப்புகளின் புதிய அத்தியாயத்தை திறக்கும் வகையிலான செயற்பாடுகளை இலங்கை முன்னெடுத்து வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போதுதெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமக் ஏக்கநாயக்க மற்றும் சர்வதேச அலுவல்கள்தொடர் பான ஜனாதிபதியின் பணிப்பாளர் தினுக் கொலம்பகே உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.

## போதை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றன. இந்த செயற்பாட்டைச் சீர்குலைக்க பல்வேறு நபர்களும் குழுக்களும் முயற்சித்து வருகின்றனர். போதைப்பொருள் வலையமைப்பு மூலம் பணம் பெறுபவர்கள்அந்தக்குழுக்களுக்கு பணத்தை செலவிடுவதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'யுக்திய' நடவடிக்கையின் மூலம் கைப் பற்றப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி7.8பில்லியன்ரூபாவாகும். பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட வாகனங்கள்மற்றும்கட்டிடங்களின் பெறுமதி 725 மில்லியன் ரூபா. அதற்காக செய்யப்பட்ட சோதனைகளின் எண்ணிக்கை 58,562. அந்த நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 58,234 ஆகும்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அலுவலகத்தில் தற்போதுள்ளவரிசைகளைகுறைக் கும் வகையில் நுஊணயளளிழசவ சேவையை அறிமுகப்படுத்த தயாராகி வருகிறோம். கொரிய மொழிபுலமைபரீட்சைகாரணமாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அலுவலகத்திற்கு

முன்பாக மீண்டும் வரிசைகள் அதிகரித்துள்ளன. அந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் கொரிய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி தேர்வில் சித்தி பெறுபவர்களுக்கு மாத்திரம் கடவுச்சீட்டு வழங்க ஏற்பாடு செய்ய உள்ளோம்.

புதிய அடையாள அட்டையை ஆட்கள் பதிவு திணைக்களத்தின் ஊடாக வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளதையும் கூறவேண்டும். தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஊடாக, (Dangerous Drugs Control Board) போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்காக பாடசாலைகள் மற்றும் பொலிஸார் இணைந்து ஏற்கனவே பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

அத்துடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவை வேட்பாளராக நிறுத்த நாம் அனைவரும் ஆதரவு வழங்குகிறோம். இந்த நாட்டை வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்து மீட்டெடுக்கவும், வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வரவும் ஜனாதிபதியால் முடிந்தது. நிலைமையை புரிந்து கொண்டவர்கள் வேறொரு ஜனாதிபதியைப் பற்றி சிந்திக்கக் கூடாது என்பதே எமது கருத்தாகும் என்றார்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரவித் ததாவது:

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு தற்போது சற்று மீண்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.அத்துடன் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள்வெற்றிப்பெற்றுள்ளது என்பதையும்,மக்களுக்கு பெரும் தடையாகஇருந்தபோராட்டங்களை முடிவுக்கு கொண்டு வந்ததையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இந்தியாவுக்கு சாதகமான செயற்பாடுகளை முன்னெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.இந்தியாவின் ரூபாவை இலங்கையில் பாவிப்பதற்கும், இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக இலங்கையை அடையாளப்படுத்துவதற்கும் எடுக்கும் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஒருபோதும் ஆதரவு வழங்க போவதில்லை. கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்.

நாட்டின் முக்கிய கேந்திர மையங்களாக உள்ள விமான நிலையம்மற்றும்துறைமுகங்களை இந்திய நிறுவனங்களுக்கு வழங்குவதால் நாட்டின் தேசிய பாதிப்பு நேரடியான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் என்பதைவெளிப்படையாககுறிப்பிட வேண்டும்.

இந்தியாவுக்கும்இலங்கைக்கும் இடையிலான எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திட விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.இந்தியாவில் 44 இலட்சம் பேர் தொழில்வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள்.

அதேபோல் 2 இலட்சம் வைத்தியர்களும் , 15 இலட்சம் பொறியியலாளர்களும் தொழில் இல்லாமல் இருக்கிறார்கள். எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டு இவர்களுக்கு இலங்கையின் தொழிற்றுறைகளை வழங்கினால் இலங்கையின் இளைஞர் இயுவதிகளின்நிலைஎன்னவாகும்?

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய அரசு செயற்படுகிறது. ஆகவே மாற்றீடு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பிரிக்ஸ் அமைப்புடன் ஒன்றிணைவதுகுறித்துஅரசுவிசேடகவனம் செலுத்த வேண்டும்.பொருளாதார நெருக்கடிக்கு கோட்டபய ராஜபக்சவின் அரசு பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நல்லாட்சி அரசின்காலத்தில்தான்பொருளாதார நெருக்கடி ஆரம்பமானது என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மாணவர் தென்கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு வருகை





(எஸ்.அஷ்ரப்கான்)

பல்கலைக்கழக அறிவுசார் வளங்களை சூழவுள்ள மாணவர்களும் தங்களது அறிவுவிருத்திக்கும் வலுவூட்டலுக்கும் பயன்படுத்த அனுமதிக்கும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உயரிய சிந்தனையின் கீழ் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் அனுமதியுடன் அட்டாளைச்சேனை தேசிய பாட சாலையில் உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) கலை கலாசார பீடம் மற்றும் அஷ்ரப் ஞாபகார்த்த நூலகம் உள்ளிட்ட பல்வறு இடங்களை பார்வை யிட்டதுடன் கலை கலாசார பீடத்தில் இடம்பெற்ற அறிவுசார் செயலமர்விலும் கலந்துகொண்டனர்.

கலை கலாசார பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அறிவுசார் செயலமர்வில் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேரா சிரியர் எம்.எம்.பாஸில் பிரதான பேச்சாளராக கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்நிகழ்வின்போது கலை கலாசார பீட சமூகவியல் துறையின் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப் மாணவர்களின் உளவள விருத்தியோடு சம்பந்தப்பட்ட உரையை ஆற்றினார்.

மாணவர்களுடன் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் உதவி அதிபர் எம்.ஜெ.எம். அன்வர் நௌஷாட் , உதவி அதிபர் ஏ.ஆர்.எம். ஆஷிக், பகுதித்தலைவர் ஏ.எம். ஜெஸீல் மற்றும் ஆசிரியர், ஆசிரியைகளான எம். நியாஸ், ஏ.எம். சித்தீக், எம்.ஏ.சி.எம். றவூப், எம். றிஸ்லி, ஏ.சி. நிலுபா, எஸ். றுமானா மற்றும் ஏ.ஏ. நாதியா ஆகியோரும் இணைந்திருந்தனர்.(05)

# அடுத்தது என்ன?......

ஆகவே தேவை, சில அர்ப்பணிப்பு உள்ள தலைமைகள்.

விவசாயத்துறை போலவே மீன்பிடித்துறையும் அபிவிருத்தி செய்யப்பட்டு நேரடி ஏற்றுமதி வருமானத்தை பெருக்க வேண்டும். இதன் மூலம் தென்னிலங்கை கம்பெனிகளுக்கு விற்று குறைந்தளவு இலாபம் ஈட்டும் முறையை மாற்றி நேரடி ஏற்றுமதி செய்யும் நிலை உருவாகி அதிக இலாபம் ஈட்ட முடியும்.

4- தொழில் துறை அபிவிருத்திப் போர் காரணமாக சிறிய நடுத்தர தொழில்கள் எல்லாம் நசிந்து போய் விட்டன. உதவும் மனப்பான்மை கொண்ட புலம்பெயர் தமிழர்களை ஒருங்கிணைத்து வடக்கு கிழக்கில் பல தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முடியும். இதன் மூலம் நம்மவர்கள் வெளிநாட்டுக்கும் கொழும்பிற்கும் அலைவதை வெகுவாக குறைக்க முடியும். தமிழ்நாட்டின் தொழிற்துறை முன்னோடிகள் உடன் கூட்டுச் சேர்ந்தும் இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ள முடியும். வரவேற்க தக்க விடயம் என்னவென்றால் ஒரு சில புலம்பெயர் உறவுகளால் தொழில் முனைவுகள் சில ஏற்கனவே ஆரம்பிக்கபட்டு உள்ளமை.

யாழ்ப்பாணம் திருகோணமலை மட்டக்ளப்பு பிரதேசங்களில் சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைக்கப்படும் என கொழும்பு ஆட்சியாளர்கள் கூறி வருகின்றனர்.. இவற்றை சீக்கிரமாக நிறுவதற்கு அரசை வலியுறுத்த வேண்டும். இந்திய அரசின் உதவியுடன் வடக்கிலும் கிழக்கிலும் தொழில்நுப் பாடசாலைகளை நிறுவி தொழிலகங்களிற்கு தேவையான பணியாளர்களை பயிற்றுவிக்க வேண்டும்.

5- விவசாயம், மீன்பிடித்துறை, உள்ளூர் உற்பத்திகள் ஏற்றுமதி செய்யவும், மூலப்பொருட்கள் இறக்குமதி செய்தலும் விரைவாகவும் விரயமின்றியும் நடைபெற வேண்டுமானால் சர்வதேச விமான கப்பல் போக்குவரத்தை நமது பிரதேசங்களில் அபிவிருத்தி செய்ய வேண்டும். பலாலி , மட்டக்களப்பு விமான நிலையங்கள் தரமுயர்தப்பட ஆவன செய்ய வேண்டும். இந்தியா உதவிக்கரம் நீட்டியபடி நிற்கிற நிலையில் நம்மவர்களோ இன்னும் மண்ணாசையில் திளைக்கிறார்கள்.

30 வருட போர்க் காலத்தில் காணி என்ன நிலம் என்ன, உயிர் வாழ்ந்தால் போதும் என்று இருந்தவர்கள் இப்போது நமது மக்களின் நன்மை கருதி அந்த பிர தேசங்களில நடக்க இருக்கும் பலதரப்பட்ட அபிவிருத்திகள், வேலை வாய்ப்புக்களை பற்றி சற்றும் சிந்திப்பதாக இல்லை. இவ்விடயத்தில் தமிழ் தலைமைகள் மக்களிடம் தெளிவை ஏற்படுத்துவதும், அவர்களுக்குரிய இழப்பீட்டை அரசிடம் இருந்து விரைவாக பெற்று கொடுக்கவும் ஆவன செய்ய வேண்டும். இவ்வாறே திருகோணமலை, காங்கேசன்துறை துறைமுகங்களையும் நன்கு அபிவிருத்தி செய்து பெரிய சரக்கு கப்பல்கள் தரிக்கும் அளவிற்கு விஸ்தரிப்பு செய்ய இந்தியாவை அணுக வேண்டும்.

6- காடு மீளுருவாக்கம்: 30 வருட போர் இறப்புக்கள் மற்றும் பொருளாதார சிதைவுகளை மட்டுமல்ல நமது மண்ணையும் கந்தக பூமி ஆக்கி உள்ளது. சித்திரை மாதத்தில் ஆரம்பமாகும் வெப்பச் சூழல் இப்போதெல்லாம் மாசி மாதத்திலேயே கொளுத்துகிறது. வடகீழ் பருவமழையோ கார்த்திகை மாதத்தில் ஆரம்பமாகி தை மாத முடிவு வரை கொட்டிக் தீர்க்கிறது. காலநிலை மாற்றம் உலகெங்கும் பொதுவானது என்றாலும் இதன் தாக்கத்தை குறைக்க நமது பிரதேசங்களில் நாம் என்ன செய்கிறோம்?. ஒரு சில மரங்கள் கார்த்திகை மாதத்தில் நடப்படுகின்றன. அவற்றில் எத்தனை மரங்கள் பராமரிக்க படுகின்றன?. எனவேதான் ஒவ்வொரு பிரதேசங்களிலும் தரிசு நிலங்களை தேர்வு செய்து பெரும் காடாக்கல் திட்டங்களை அதில் மேற்கொள்ளல் அவசியம். இவற்றிற்கு சிறந்த முன் உதாரணம் வடமராட்சியில் உள்ள மணல் காடு மக்கள் தங்கள் கூட்டு முயற்சியியால் உருவாக்கியுள்ள பல ஏக்கர் விஸ்தீரணம் உள்ள அழகிய சவுக்கு மரக் காடு.

இது பல்வேறு பறவை இனங்களுக்கு தற்போது உறைவிடமாக வருகிறது. இவ்வாறான பல காடுகள் வடக்கு கிழக்கில் உருவாக்க படுதல் மிக அவசியம். இதுவே நம் அடுத்த தலைமுறைக்கு அளிக்கும் பெருஞ்செல்வம் ஆகும்.

7- மீள் புதிப்பிக்க தக்க சக்தி. சூரிய சக்தி மின்சார உற்பத்தியை ஒவ்வொரு வீட்டிலும் நிறுவ ஊக்குவிப்பதுடன், பயிர் நீர்ப்பாசனத்திற்கு மண்ணெண்ணை பம்புகள் பாவிப்பதை தவிர்த்து சூரிய சக்தியில் இயங்கும் பம்பு பாவனையை நடைமுறைப்படுத்த முயற்சிக்க வேண்டும். இந்த பம்பு தொழிற்சாலை ஒன்றை தமிழ்நாட்டை சேர்ந்த தொழில் அதிபர்களின் உதவியுடன் நமது பிரதேசங்களில் நிறுவ முடிந்தால் மிக நன்று. மன்னார் தீவில் காற்றாலைகள் அமைப்பது இடம்பெயர் பறவைகளுக்கு ஆபத்தானதாக இருக்குமானால் அதை சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து பேசி வேறொரு இடத்தில் அமைக்க கோரலாம்.

8- சுற்றுலாத்துறை அபிவிருத்தி: கிழக்கில் சுற்றுலா துறை விருத்தியடைந்த அளவு வடக்கில் விருத்தியடையவில்லை. இத்துறை தீவுப் பகுதிகளில் குறிப்பாக மண்டைதீவு ,நெடுந்தீவு, மற்றும் காரைநகர் கசூரீனா கடற்கரை போன்றவை சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் தலங்களாக மாற்றலாம். சிறந்த ஹோட்டல்களை அமைக்க முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் அப்பகுதி இளைஞர் யுவதிகளுக்கு அதிக வேலை வாய்ப்புக்களை அளிக்கலாம். மேலும் இவ்வாறான அபிவிருத்திகள் நடக்கும்போது உட்கட்டமைப்புகளும் (கைசயளவசரஉவரசந)விருத்தியாகும்.

9- கல்வித்துறை: ஒருகாலத்தில் கல்வியில் முன்னோடியாக விளங்கியது யாழ். மாவட்டம். இன்றோ கடைசி இடத்தில் தள்ளாடுகிறது . கல்வியை ஊக்குவிக்க பல புலமைப் பரிசில் திட்டங்களை உள்ளூரிலேயே உருவாக்கலாம். மேலும் ஆங்கிலத்தில் திறன் பெற விசேட பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். ஆங்கில பேச்சுத்திறன் குறைவினால் தான் நமது இளைஞர் யுவதிகளின் தன்னம்பிக்கை மிகவும் கீழ் நிலையில் உள்ளது, கொழும்பு வாழ் இளையோர் உடன் ஒப்பிடும்போது. இலங்கை அரசு பிரபலமான ஐஜவு ஆயனசயள கிளை ஒன்றை கண்டியில் நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது. இதே முறையை பின்பற்றி தமிழ்நாட்டின் மிக பிரபலமான உயர்கல்வி நிலையங்களின் கிளைகளை வடக்கு கிழக்கில் ஆரம்பிக்க முயற்சி செய்ய வேண்டும்.

10- மீள்குடியேற்றம்: நமது சனத்தொகை விகிதாச்சாரம் போர், மற்றும் தொடரும் வெளிநாட்டு புலம்பெயர் நடவடிக்கைகள் காரணமாக குறைந்து கொண்டே வருகிறது. விரைவில் ஈழத்தமிழர்கள் இரண்டாம் சிறுபான்மையினர் நிலைக்கு தள்ளப்படுவர். இதைப் பற்றி தமிழ்த் தலைமைகள் கண்டுகொள்வதும் இல்லை, கவலைப்படுவதும் இல்லை. ஒரு லட்சத்திற்கு மேலான நம் மக்கள் அகதிகளாக, அவலமான சூழ்நிலையில் அந்தஸ்து இல்லாது வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் மீள் குடியேற்றம் பற்றி நமது தலைமைகள் சிந்திப்பதே இல்லை. இம்மக்களை சந்தித்து அவர்களை மீள் அழைத்து வந்து குடியேற்ற வேண்டும். அவர்களுக்கான வீடுகள் இந்திய அரசின் உதவியுடன் அமைத்து கொடுக்க ஏற்பாடு செய்வதுடன், அந்தந்த இடங்களில் சிறிய நடுத்தர தொழிற்சாலைகளுக்கும் அமைத்து அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த வேண்டும். மனதை வருத்திய விடயம் என்னவென்றால் மிகச் சமீபத்தில் குடிவரவு திணைக்களத்தை சேர்ந்த ஒரு சிங்கள அதிகாரி வவுனியாவில் வைத்து கூறி இருந்தார் இந்தியாவில் அகதிகளாக வாழும் தமிழ்மக்கள் இங்கு சீக்கிரமே வந்து கௌரவத்துடன் குடியேற வேண்டும் என்று.

அவருக்கு உள்ள அந்த உணர்வுகள் கூட நமது தலைமைகளுக்கு இல்லையே என்பதுதான். மேலும் புலம்பெயர் நல்ல உளங்களின் உதவியுடன் குடும்ப நல நிதியம் ஒன்றை ஆரம்பித்து இரண்டுக்கு மேல் பிள்ளைகளை பெறும் தம்பதிகளுக்கு மாதாமாதம் ஊக்கத் தொகை ஒன்றை வழங்கி குறைந்து வரும் சனத்தொகையை அதிகரித்து சமானப்படுத்தும் முயற்சியை குறைந்தது அடுத்த 10 வருடங்களிற்காவது மேற்கொள்ளல் அவசியம்.

இதைப் போல இன்னும் சில விடயங்கள் உண்டு. மிக முக்கியமானவற்றை மட்டும் குறிப்பிட்டுள்ளேன். இவ்வாறான சமூக பொருளாதார விடயங்களை உதாசீனம் செய்ததும் கூட்டமைப்பின் வாக்குகள் சரியவும் ஏனையவர்களுக்கு அதிகரிக்கவும் ஒரு காரணம். ஆகவே, சிறீதரன் சமஸ்டி, சுயநிர்ணயம் பற்றி மட்டுமே பேசிக்கொண்டு இருப்பார், ஆனால் வீரவன்ச, சரத் வீரசேகர, கம்மன்பில போன்ற இனவாதிகளுக்கும், சில துவேஷம் பிடித்த பிக்குகள் கூட்டத்திற்கும் தீனி போடும் வேலையை மட்டுமே செய்வார், தமிழினத்திற்கு சாத்தியமான எந்த ஒரு தீர்வையும் பெற்றுத்தராமல். மேலும் சாத்தியமற்ற கோரிக்கைகளை இந்தியாவோ அமெரிக்காவோ அல்லது ஏனைய மேற்குலக நாடுகளோ ஆதரிக்க மாட்டா என்பதையும் சிறிதரன் நினைவில் கொள்வது நன்று. சில புலம்பெயர் கூட்டங்களையும், துப்புக்கெட்ட உள்ளூர் அரசியல்வாதிகளையும் சந்தோஷப்படுத்த நினைப்பது பெரும் தவறு.

புலிகளின் போராட்டம் கூட இந்த கூட்டங்களில் நம்பிக்கை வைத்து செயற்பட்ட தால்தான் அநியாயமாக முடிவிற்கு வந்தது. அவர்களும் நடைமுறை சாத்தியமற்ற இலக்கை கைவிட மறுத்ததும் உலக நாடுகள் அனைத்தையுமே பகைத்ததுக் கொண்டதுமே இறுதியில் பெரும் அழிவிற்கு வழிவகுத்தது. எனவே மேற்குறிப்பிட்ட முயற்சிகளை அவர் நிச்சயம் மேற்கொள்ள வேண்டும் என்பது பெரும்பான்மையானவர்களின் அபிப்பிராயம், அவாவும் கூட. தமிழ் தேசியம் பேசி தலைவர் தேர்வில் வெற்றி பெற்றதனால், பழையபடி சுயநிர்ணய உரிமை, சமஷ்டி போன்ற நடைமுறை சாத்தியமற்ற கோஷங்களை மீண்டும் மீண்டும் தூசி தட்டி எடுத்தால்தான், கொள்கை பிடிப்புள்ள தலைவர் என்ற பிம்பத்தை உள்ளூரில் வாக்கு வங்கிக்காகவும் புலம்பெயர் தமிழர்கள் இடம் இருந்து நிதி வசதிகளுக்காகவும் உபயோகப்படும் என்று இரட்டை நோக்குடன் செயற்படக்கூடாது. தற்போதைய கள நிலவரம் கருதி கையில் இருக்கும் 13ம் திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். அதற்கு அப்பால் இந்தியாவோ மேற்குலக நாடுகளோ இலங்கை அரசிற்கு பரிந்துரை செய்ய முடியாது. ஏற்கனவே சீனா இங்கு ஒற்றை கால் ஊன்றி விட்டது. மேலதிகஅழுத்தங்கள் அரசாங்கத்தை மீண்டும் முழுமையாக சீனா பக்கம் சாய்த்து மற்றக்காலும் ஊன்றிவிட வழி வகுக்கும். இந்தியாவின் உதவியுடன் அரசியல் தீர்வும் சமாந்தரமாக சமூக,பொருளாதார விருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதுமே நமக்குள்ள ஒரே பாதை. அதுவும் பி.ஜே.பி. அரசு மட்டுமே சற்று உரக்க குரல் கொடுக்கும். காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் கண்டு கொள்ள மாட்டார்கள் என்பதையும் மறக்க வேண்டாம். இவற்றை கணக்கெடுக்க தவறுவீர்களே ஆயின் , படித்த இளைஞர்கள் மற்றும் நல் அந்தஸ்து உள்ள தொழில் முனைவோர் அடங்கியபுதிய தலைமை ஒன்று நிச்சயம் உருவாகும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

காலைக்கதிர்
Kalaikkathir

# கிராத் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு











நாடளாவிய ரீதியில் யு ரிவி நடத்திய கிராத் போட்டியில் 1ஆம், 2ஆம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா ,கடந்த சனிக்கிழமை மூதூர், ஸஹ்ரா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்து உரையாற்றினார்.

இதன்போது, மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதி அமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்ரூப், அரசியல் அதிகார சபை உறுப்பினர் ஹில்மி மொஹிடீன், மூதூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஹரீஸ், சட்டத்தரணி முஹம்மட் மற்றும் உள்ளூராட்சிமன்ற முன்னாள் உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்பட ஊர்ப்பிரமுகர்களும் கலந்துகொண்டனர். (05)

## பிரபல மார்க்க அறிஞர் ஆதில் ஹசன் கலந்துகொள்ளும் விசேட பயான் நிகழ்வு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருதில் எதிர்வரும் புனித ரமழானை முன்னிட்டு, பிரபல மார்க்க அறிஞர் ஆதில் ஹசன் உட்பட உலமாக்கள் கலந்து கொள்ளும் விசேட பயான் நிகழ்வு நாளை (வெள்ளிக்கிழமை) மாலை 5 மணி முதல் இரவு 9.30 மணி வரை சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசல் ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வில், அல்-குர்ஆன், ஸுன்னா வழிகாட்டலில் ஓர் இஸ்லாமிய குடும்பம் எனும் தலைப்பில் பிரபல மார்க்க அறிஞர் அஷ்ஷேஹ் ஆதில் ஹஸன் கலந்து கொண்டு விசேட உரையாற்றுவதோடு, இன்றைய நவீன உலகில் இளைஞர்கள் எதிர் நோக்கும் சவால்கள் எனும் தலைப்பில் அஷ்ஷேஹ் எம்.என்.எம். கிஸ்லி (தௌஹீதி), றமழானை அமல்களைக் கொண்டு அலங்கரிப்போம் எனும் தலைப்பில் அஷ்ஷேஹ் எம்.எம். அஹ்ஸன் (ஸஹ்வி), ஆகியோரும் இதன்போது உரை நிகழ்த்தவுள்ளனர்.

பெண்களுக்கான தனி இட வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் அனைவரும் கலந்து பயனடையுமாறு ஏற்பாட்டு குழுவினர் திறந்த அழைப்பு விடுத்துள்ளனர். (05)

## இரணைமடுக் குளத்தையும் வயல் நிலங்களையும் சட்டவிரோத மணலகழ்வோரிடமிருந்து காப்பாற்றுக

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் பகுதியில் மிக மோசமாக அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வால் இரணைமடு குளத்திற்கும் அதனை சூழவுள்ள வயல் நிலங்களுக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் இந்த நிலைமை தொடர்ந்தால் நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களை இழக்க நேரிடுவதோடு, இரணைமடு குளத்திற்கும் பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் எனவே குளத்தையும் வயலையும் காப்பாற்ற விரைந்து நடவடிக்கை எடுங்கள் என உரிய தரப்பினர்களிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரணைமடு குளத்திற்கு கீழ் கோரமோட்டை ஆற்றுப்பகுதியிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் சமீப காலமாக சட்டவிரோத மணல் அகழ்வு கட்டுக்கடங்காது மிக மோசமாக அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் உரிய தரப்பினர்களுக்கு தகவல் வழங்கும் சமூக செயற்பாட்டாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதோடு, அவர்களின் வீடுகளுக்குள் பட்டாசுகளை கொளுத்தி எறிந்து எச்சரிக்கை விடும் செயற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றன.

இதனால் கண் முன்னே இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பலர் மௌனமாக கடந்து சென்று விடுகின்றனர் எனத் தெரிவித்துள்ள பிரதேசவாசி ஒருவர், இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களுக்கு பொலிஸ், பாதுகாப்புத் தரப்பினர்கள், அரசில்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் செல்வாக்கு இருப்பதாகவும் இதனால் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் எவரும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதும் அவர்களால் கூட்டத்தில் கலந்துரையாடப்படுவதோடு நடவடிக்கை நின்றுவிடுகிறது.

மாவட்ட எம்.பியிடம் முறையிட்டால் அவரும் திரும்பி பார்ப்பதாக இல்லை, பொலீஸ் உட்பட பாதுகாப்பு தரப்பினர்களிடம் முறையிட்டால் அவர்கள் மணல் அகழ்வோரிடம் எங்களை காட்டிக்கொடுக்கின்றனர். இந்த நிலையில் எங்களால் என்ன செய்வது என்றே தெரியவில்லை எனவும் கவலை தெரிவித்துள்ளனர். (05)

## மருதமுனை பிறைட் பியூச்சர் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்



(நூருல் ஹுதா உமர்)

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் 'மருதமுனை இளைஞர் விளையாட்டுகழகங்களுக்கு உதவுவோம்' எனும் செயற் திட்டத்தின் கீழ் அல்-ஹாஜ் கலீல் முஸ்தபாவால் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்ற நிகழ்வு மனாரியன் 88 அமைப்பினரால் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும் மருதமுனையில் காணப்படுகின்ற சுமார் 33 இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கும் வருடாந்தம் உதவிகளை தொடர்ந்து வழங்கும் இந்த செயற்திட்டத்தின் கீழ் இதுவரைக்கும் 12 கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கதாகும்.

இந்த குறிப்பிட்ட செயற்திட்டம் தொடர்பாக மருதமுனை ' பிறைட் பியூச்சர் ' விளையாட்டு கழகம் மற்றும் பர்வின் ரெடிங் , லதான் அக்ரோ இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்-ஹாஜ் கலீல் முஸ்தபாவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு மருதமுனை பிரதான வீதி முஸ்தபா கட்டிட தொகுதியில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இந் நிகழ்வில் மருதமுனை 'பிறைட் பியூச்சர்' ' விளையாட்டு கழகம் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் சவால்கள் மற்றும் கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால உதவிகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன்,

விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (05)

## யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் மாணவர்கள் மீது வாள் வெட்டு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மாணவர்கள் இருவர் மீது, வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிழமை மாலை இந்த வாள் வெட்டு தாக்குதலை நடத்தி விட்டு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த இரு மாணவர்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாள் வெட்டு தாக்குதலுக்குக் காரணம் தெரியாத நிலையில் பருத்தித்துறை பொலிஸார் மாணவர்களிடம் வாக்கு மூலங்களைப் பெற்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

## யாழ். நீர்வேலியில் விபத்து பல்கலை மாணவன் சாவு

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவன் விபத்தில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர் . மானிப்பாய் பகுதியை சேர்ந்த 22 வயதுடைய மாணவனே நேற்று (புதன்கிழமை) உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவன் மோட்டார் சைக்கிளில் மானிப்பாயிலிருந்து நீர்வேலி பகுதிக்கு சென்ற போது வீதியின் குறுக்கே ஓடிய நாய் மோட்டார் சைக்கிளில் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

யாழில் உள்ள பிரபல உதைப்பந்தாட்ட கழகங்களில் ஒன்றான ஊரெழு றோயல் கழகத்தின் பிரபல வீரருமாவார் இவர்.

விபத்தில் காயமடைந்த மாணவன் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## மருந்தக உரிமையாளர் கல்கிசையில் கைது

### 10000 போதை மாத்திரைகளும் சிக்கின

*போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு அதிக விலையில் போதைமாத்திரைகளை விற்பனை செய்ததாக கூறப்படும் மருந்தகம் ஒன்றின் பெண் உரிமையாளர் ஒருவர் கல்கிசை குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கல்கிசை குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 10 ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவு

## விளக்குகிறார் சி.வி.கே.சிவஞானம்




இவங்கைத்தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவும் அவரின் கடமைகள் பற்றிய விடயங்களை வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் நேற்று (புதன்கிழமை) நடத்திய ஊடகச் சந்திப்பில் தெளிவுபடுத்தினார்.

அந்தச் சந்திப்பில் அவர் தெளிவுபடுத்திய விடயங்கள் பற்றி தெரிவித்தவை வருமாறு –

இலங்கைத்தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் கட்சியின் அமைப்புவிதிஅல்லதுயாப்பின் விதி 7 அ(3) இன்படி பொதுச்சபையால் தெரிவு செய்யப்படுவார்.

அமைப்பு விதி 13(ஆ) பொதுச் செயலாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை விவரிக்கிறது. இதன்படி, இவர் கட்சியின் பிரதம செயல் ஆற்றும் உத்தியோகத்தர் ஆவதுடன் கட்சியின் சகல கிளைகளை ஒருமுகப்படுத்தி இணைப்பதுடன்மத்தியஅலுவலகத் திற்குபொறுப்பாகவும்இருப்பார்.மிகப் பிரதானமாக பொதுச் செயலாளர் எல்லாவிடயங்களிலும்தலைவருக்கு உதவி செய்வதுடன் தலைவரோடு ஆலோசித்துகட்சியின்கருமங்களை நடத்துவார்.

விதி 9(அ)வின்படி கட்சியின் முதல்வர் தலைவரே. இதன்படி நிறைவேற்று அதிகாரம் தலைவருக்குரியது. விதி 13(அ)02 இன்படி பொதுச் செயலாளருக்கும் இணைப் பொருளாளருக்கும் கட்சியை நடத்தும் விடயத்தில் ஆலோசனை கூறுவதும் வழி நடத்துவதும்தலைவரின்கடமையும் அதிகாரமும் ஆகும்.

இவற்றின்படிபொதுச்செயலாளர் ஒரு நிர்வாக அதிகாரியே தவிர தனித்துவமான நிறைவேற்று அதிகாரம்கொண்டவரல்லர் என்பது தெளிவு.

பொதுச் செயாலளர் ஒருவர் தாமாக பதவி விலகினாலோ, மத்திய செயற்குழுவால் பதவி நீக்கம்செய்யப்பட்டாலோ அல்லது மரணித்தாலோபதவிவறிதாக்கப்பட்டு வெற்றிடமாகும்.

விதி 13 (ஈ) 02 இன்படி பொதுச் செயலாளர் தமது கடமைகளை நிறைவேற்ற முடியாதவிடத்து துணைச் செயலாளர் அவரது கடமைகளை பதில் கடமை மூலம் நிறைவேற்றுவார். இது ஒரு நடைமுறை ஒழுங்காகும்.

எனினும் பொதுச் செயலாளர் பதவி வறிதாக்கப்பட்டு வெற்றிடமானால் அது விதி 13(உ)இன்படி மத்திய செயற்குழுவால் நிரப் பப்படும். வெற்றிடம் பொதுச்சபை யால் தான் தெரிவு செய்யப்படும் என்ற பரவலாக கூறப்படும் கருத்து தவறானது.

மேலும் 2024 ஆம் ஆண்டு தேர்தல்கள் ஆண்டாக இருப்பதால் தேசிய பட்டியல் போன்ற விடயங்களில் தனித்து அதிகாரம் உள்ளவர் என்பதால் இப்பதவி முக்கியத்துவம் பெறுவதாகக் கூறுவதும் தவறு.

இந்தக் கருத்து 2020 ஆம் ஆண்டின் நாடாளுமன்ற தேசியப் பட்டியல்நியமனத்தைஅப்போதைய பொதுச் செயலாளர் கடசியின் முறைப்படியானஅங்கீகாரம்எதுவும் இல்லாம்தலைவரின் ஒப்புதலின்றி மேற்கொண்டமையைஉதாரணமாக கொண்டதன் அடிப்படையில் எழுந்திருக்கலாம். அதுவும்தவறான கருத்து. கட்சித் தலைவரினதும் கட்சியின் அங்கீகாரமும் பெறாத அந்த நியமனத்தை இரண்டு நாள்களுக்குள்ளே ஆட்சேபித் திருந்தால் அந்த நியமனத்தை இரத்துச் செய்திருக்கலாம். ஆனால் அது பிரதேச வாதத்திற்கு இடமளிக்கும் என்பதாலேயே அவ்வாறு செய்யவில்லை.

கட்சியின் தலைவர் உள்ளிட்ட சகல பதவிகளுக்குமான தெரிவு வாக்கெடுப்புபோட்டிமூலம்இடம்பெறு வது முழுமையாக தவிர்க்கப்படல் வேண்டும் என்ற எனது ஆணித்தர மான கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அவ்வாறுதான் கடந்த 74 வருடங்களாக நிகழ்ந்து வருகின்றது என்றும் கூறினார்.

மேலும், இம்முறை இடம்பெற்ற வாக்கெடுப்பு தெரிவு மூலம் கட்சி சில கூறுகளாக பிளவுபட்டுள்ளமையை யாரும் மறுதலிக்கமுடியாது. இந்த விடயத்தில் ஒரு பிரபல தேசிய பத்திரிகையின் நீண்ட கால ஆசிரியரானவீரகத்திதனபாலசிங்கம் தமது கட்டுரை ஒன்றில் –

'கட்சியின் தலைவரை ஏகமன தாகவே தெரிவு செய்யும் பாரம்பரி யத்தை தந்தை செல்வா ஏன் உறுதியாகக் கடைப்பிடித்து வந்தார் என்பது இப்போது எல்லோருக்கும் புரியும். தலைவர் பதவிக்கு அந்த ஆனானப்பட்ட அமிர்தலிங்கமும் இராசதுரையும் போட்டி போடத் தலைப்பட்டபோது அவர்களைச் சாதுரியமாகக் கையாண்ட தந்தை செல்வா எங்கே.....?' என்று கூறிய கருத்துடன் நான் முழுமையாக உடன்படுகிறேன்என்றும்ஜனநாயகம் என்ற பெயரில் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தக்கூடிய எந்த பதவிக்கும் வாக்கெடுப்பு தேர்தல் கட்சி நலன் கருதி இடம்பெறக்கூடாது என்பதே எனது திடமான நிலைப்பாடு. அப்படி ஒரு நிகழ்வு இடம்பெற்றால் அதில் நான் நிச்சயமாக கலந்து கொள்ள மாட்டேன் என்பதையும் பதிவு செய்து கொள்கிறேன் என்றும் அந்த ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார்.(05)

# யாழ்ப்பாணம் காரைநகரில் மோ.சைக்கிள் தீக்கிரை



யாழ்ப்பாணம் – காரைநகர் பகுதியில் வாள்வெட்டு வன்முறை கும்பலொன்றால் மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரையாக்கப்பட் டுள்ளது.

காரைநகர் ஆலடிப்பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.வன்முறை கும்பல் தப்பிச்சென் றுள்ள நிலையில் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அனுமதிப்பத்திரம் இன்றி கால்நடைகளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற இருவர் கைது



தருமபுரபொலீஸ்பிரிவுக்குஉட்பட்ட புளியம் பொக்கனை சந்திப்பகுதியில் இரவு நேர காவல் கடமையில் ஈடுபட்ட பொலிஸாரின் வீதிச் சோதனையின் மூலம் 7 எருமைமாடுகளைஏற்றிவேறு பகுதிக்கு கொண்டு செல்ல முற்பட்ட கப்ரக வாகனமும் மற்றும் வாகன சாரதி மற்றும் வாகன உதவியாளர் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏழுகால்நடைகளும்பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் கால்நடை கொண்டு செல்வதற்கான கால்நடைவைத்தியர்சான்றிதழ்இன்மை மற்றும் வாகனத்தில் கால்நடைகள் ஏற்றிச் செல்லக்கூடியவாறு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படாமல் மற்றும் தண்ணீர் காற்றோட்ட வசதியின்மை காரணங்களுக்காக இரண்டு சந்தேநபர்கள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டசந்தேகநபர்கள் நேற்று (புதன்கிழமை) கிளிநொச்சி நீதிமன்றம் முற்படுத்தப்பட்டனர்.(05)

# 48ஆவது பிரதேச கிறிக்கெட் விளையாட்டில் ஈஸ்ட் லங்கா விளையாட்டுக்கழகம் சம்பியன்





(மூதூர் நிருபர்)

48 ஆவது மூதூர் பிதேச விளையாட்டு விழா



மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக்கின் தலைமையில் மூதூர் பிரதேச செயலக விளையிட்டு உத்தியோகத்தர்எம்.எம்.ஹரீஸ்இன்நெறிப்படுத்தலில் மூதூரில் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

இதனடிப்படையில் 2024.02.17, 18 ஆந் திகதிகளில் மூதூர் முத்தவெளி பொதுவிளையாட்டு மைதாத்தில் நடைபெற்ற அணிக்கு 11 பேர் கலந்துகொண்ட 5 ஓவர்கள் மட்டுப்படுத்த மென்பந்து கிறிக்கட் சுற்றுப்போட்டியில், ஈஸ்ட் லங்கா விளையாட்டுக்கழக அணியினர் 4 ஓவர்கள் முடிவில் 63 ஓட்டங்களைப்பெற்றுசம்பியனானது. அதேநேரம் யுனைட்டெட் விளையாட்டுக்கழக அணியினர் 5 ஓவர்கள் முடிவில் 61ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டு இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டுள்ளனர்.

இதில் மொத்தமாக 26 விளையாட்டுக்கழக அணியினர் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)





மருதமுனை ஷஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) தரம் 6 இற்கு புதிதாக இணைத்துக்கொள்ளும் மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான் தலைமையில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்றது.

புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களை, பேண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு வரவேற்கப்பட்டதோடு புதிய மாணவர்களுக்கு தரம் 7 இல்கல்விகற்கும்மாணவர்களால்மாலைஅணிவித்து வரவேற்கப்பட்டார்கள். இந்த நிகழ்வில் ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் எம்.பி.எம்.றாஜி, அல்–ஹிக்மா ஜூனியர் பாடசாலையின் பொறுப்பதிபர் எம்.எல்.எம்.மஹ்றூப், அண்மையில் இப் பாடசாலையில் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட அதிபர்களான எம்.சிராஜ், ஏ.கே. பாரீஸ், உட்பட ஆசிரியர்கள் மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

அல்–ஹிக்மா ஜூனியர் பாடசாலையில் இருந்து சுமார் அறுபதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஷம்ஸ் மத்திய கல்லூரியில் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய உத்தர கண்டம் மாநிலத்தை சேர்ந்த சுவாமி அமைச்சர் ஜீவன் தொண்டமானை சந்தித்து பேச்சு

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய உத்தர கண்டம்மாநிலத்தைசேர்ந்தசுவாமி கைலாஷ் நந்து ஜி ஹரிக்வார் அவர்களும், மோக்ஷா டிரஸ்ட் நிறுவனத்தின் பிரதானிகளும் இ.தொ.காவின்பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானை சந்தித்து பேச்சு நடத்தினர்.

அதன்பின்னர் அமைச்சருடன் இணைந்து இக்குழுவினர் நுவரெலியா சீதாஎலியவில் உள்ள சீதையம்மன் ஆலயத்துக்குச் சென்றுவழிபாடுகளில்ஈடுபட்டதுடன், ஆலயத்தின் வரலாறு, தொன்மை பற்றியும் கேட்டறிந்தனர்.

பிறகு இறம்பொடையில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலுக்கு சென்ற மேற்படி குழுவினர் இங்கு வழிபாடுகளில் ஈ டு ப ட் ட து ட ன், இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான ஆன்மீகம் சார்ந்த உறவுகளை மேம்படுத்துவதன் அவசியத்துவம் பற்றியும் எடுத்துரைத்துள்ளனர்.

அதேவேளை, அமைச்சரின் முக்கிய குழுவினருடன் இணைந்து கண்டி, தலதா மாளிகைக்கு சென்று அங்கு வழிபாடுகளில் ஈடுபட்ட இந்தக்குழுவினர் மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரரரை சந்தித்து ஆசிபெற்றனர்.

இதன்போது, அமைச்சருடன், இலங்கைதொழிலாளர்காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி பொதுச் செயலாளர் எஸ்.செல்லமுத்து, அமைச்சின் மக்கள் தொடர்பு அதிகாரி தயாளன் என பல முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர். (05)



# அதிகளவு துறைசார் கல்லூரிகள் உருவாக்கப்படுதல் வேண்டும்

## தனியார் கல்லூரி நிகழ்வில் எஸ்.எம். சபீஸ் தெரிவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

நமது நாட்டில் வெறும் 17 அரச பல்கலைக்கழகங்கள் மாத்திரமே உள்ளது. அரசாங்கம் தமது பொருளாதார நிலைமைக்கு ஏற்ப மாணவர்களை இணைத்து கொன்டாலும் ஏனைய மாணவர்கள் தாம் விரும்புகின்ற துறையில் கல்வி கற்க தனியார் கல்லூரிகள் அதிகம் உருவாக்கப்பட வேண்டும் என கிழக்கின் கேடயம் பிரதானியும் அக்கறைப்பற்று மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

நிந்தவூரில்இயங்கும்ஸ்டான்போர்ட் கல்லூரியில் புதிய கற்கைநெறிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும்உரையாற்றியஅவர்–

ஐக்கிய அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் இன்று 1000 மேற்பட்ட பல்கலைக்கழகங்களும் 6000 ஆம் மேற்பட்ட இலாப நோக்கமற்ற மற்றும் இலாபநோக்கமுடைய கல்லூரிகளும் இயங்குகின்றன. அவர்களுக்குத் தேவையான பட்டதாரிகளை, உயர்தரமான ஆராய்ச்சியாளர்களை, சட்டத்தரணிகளை, வைத்தியர்களை இவைகள்உருவாக்குகின்றது.கல்லூரிகளில் மாணவர்கள் குறைவாகவும் தமது பேராசிரியருடன் அருகில் உரையாடக்கூடிய வாய்ப்பையும் குறுகிய காலத்துக்குள் பட்டப்படிப்பை நிறைவு செய்யக்கூடிய சந்தர்பங்களையும் வழங்குகின்றது. இதனால் தொழில் சந்தைக்கு தேவையான ஆளணிகளை உருவாக்கக்கூடிய சந்தர்பம் கிடைப்பதோடு அனைத்து மாணவர்களும் தொழில் திறமையுடையவர்களாக உருவாகும் சந்தர்பமும் கிடைக்கின்றது.

வெளிநாடுகளில்பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் உயர் ஆராய்ச்சி



செய்வதனையும், சட்டப் படிப்பு வைத்தியத்துறை மற்றும் நான்கு வருட பாடநெறிகளே முக்கியத் துவப்படுத்தப்படுகின்றது. ஆனால், இலங்கையில் உயர்கல்வி என்றால் பல்கலைக்கழகம்மாத்திரமேமுன்தெரிகின்றமுறையாகக்காணப்படுகின்றது. அதே நேரம் அங்கே கல்வி பயின்றால் மாத்திரமே படித்தவர்கள் என்ற விம்பத்தோடும் சிலர் வெளிவருகின்றனர். இந்நிலை மாற்றம் பெற்று தனியார் கல்லூரிகள் அதிகம் உருவாக்கப்பட்டுஅதனைஅரசுமுறையாகப் பரிசீலித்து உறுதிப்படுத்துவது அவர்களின் கடமையாகும். அதன் மூலம் வெளிநாட்டு மாணவர்களை இலங்கைக்குள் உள்ளீர்க்கும் அதேநேரம் எமது மாணவர்கள் அதிக பணம்செலவிட்டுவெளிநாடுகளுக்குச் சென்று கல்விகற்கவேண்டிய தேவையும் ஏற்படாது.

இம்முறைகளைக் கையாண்டு கடந்த இரண்டுவருடங்களாக இயங்கி வெற்றிபெற்றுள்ள ஸ்டான்போர்ட் கல்லூரி தொடர்ந்தும் இப்பகுதி மாணவர்களுக்கு சிறப்பான கல்விச்சேவை வழங்கிடவும் சகல துறைகளில் மிளிரவும் பிரார்த்திக்கின்றோம் எனத் தெரிவித்தார். (05)

# அமெரிக்க–இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழுவின் செயலமர்வு தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில்





(கே எ.ஹமீட்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கரின் வழிகாட்டலின்கீழ் பல்கலைக்கழக பணியாளர் மேம்பாட்டு நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.சி. சல்பியா உம்மா மற்றும் தொழில் வழிகாட்டல் நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி எம்.பி. எம். இர்ஷாட் ஆகியோரின் இணைத் தலைமையில்நேற்று(புதன்கிழமை) இருஅமர்வுகளாக செயலமர்வுகள் இடம்பெற்றன.

மேற்படி அமர்வுகளில் அமெரிக்க – இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பெட்ரிக் மெக்னமாரா







கலந்துகொண்டு செயலமர்வின் நோக்கங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

முதலாவது அமர்வு பல்கலைக்கழக கல்விசார் அணியினர்மற்றும்உயர்கல்வியைத்தொடரவிரும்பும் இறுதியாண்டு மாணவர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இந்நிகழ்வு தொழில்நுட்பவியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இரண்டாவது அமர்வு உபவேந்தரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உபவேந்தர், பீடாதிபதிகள், நூலகர், பதில் பதிவாளர், பணியாளர் மேம்பாட்டு நிலையத்தின் பணிப்பாளர், தொழில் வழிகாட்டல் நிலையத்தின் பணிப்பாளர் உள்ளிட்டவர்களுடன் உயர்மட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அமெரிக்க–இலங்கைஃபுல்பிரைட்ஆணைக்குழு இரு நாடுகளுக்குமிடையேயான பரிமாற்றங்கள், கல்விப் பங்காண்மைகள் மற்றும் பரஸ்பர புரிதல் ஆகியவற்றை வளர்க்கும் ஒரு புதிய சகாப்தத்திற்குள் ஆணைக்குழு பிரவேசித்து செயற்படுகின்றது . எல்லைகளுக்கு அப்பால் சென்று அறிஞர்கள் மற்றும் மாணவர்களுக்கான கல்விச் சூழலை மேம்படுத்தும் துடிப்பான அறிவுப் பரிமாற்றங்கள் ஊடாக, அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையே காணப்படும் மக்களுக்கிடையிலான, கல்வி மற்றும் அறிவியல் உறவுகளை மேலும் பலப்படுத்துவதில் ஆணைக்குழு ஒரு முக்கிய பங்கை வகித்து செயற்படுகின்றது.

'ஃபுல்பிரைட் நிகழ்ச்சித்திட்டம் 71ஆண்டுகளாக இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை கட்டமைத்து இரு நாடுகளுக்கும் பயனளிக்கிறது. 2000 இற்கும் மேற்பட்ட முன்னாள் மாணவர்கள் பயணம் செய்து நிகழ்ச்சித்திட்டத்தில் நேரடியாகப் பங்கேற்றுள்ளனர். உயிரியல், மருத்துவ ஆராய்ச்சி முதல் ஆங்கில மொழி கற்பித்தலின் காலனித்துவ நீக்கத்தை இலக்காகக் கொண்ட ஓர் ஆய்விற்கு உதவி செய்வது வரை, புல்பிரைட் மானியம் பெறுபவர்கள் வகுப்பறைக்கு அப்பாலும் நீடிக்கும் வாழ்நாள் உறவுகளை உருவாக்குகின்ற, பலரது வாழ்க்கையினை மாற்றியமைக்கின்ற கல்விப் பணிகளை மேற்கொள்கின்றனர்.

அமெரிக்க–இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழு: 1952ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் திகதி அமெரிக்க மற்றும் இலங்கை அரசாங்கங்களால் கையெழுத்திடப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்க–இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. வரி செலுத்தும் அமெரிக்கக் குடிமக்களால் நிதியளிக்கப்பட்ட இவ்வாணைக்குழுவானது கல்வி, கலாசார மற்றும் தொழில்வாண்மைப் பரிமாற்றங்கள் ஊடாக பரஸ்பர புரிதலை ஊக்குவிக்கும் ஒரு தன்னாட்சியுடைய, இரு–தேசிய, அரசு சாரா அமைப்பாகும். பல்கலைக்கழகங்கள், வணிக, அரச, அரச சார்பற்ற மற்றும் கலை நிறுவனங்கள் ஆகியவற்றின் உயர் மட்டங்களில் பணியாற்றும் அமெரிக்க–இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழுவின் 2,000இற்கும் மேற்பட்ட பழைய மாணவர்கள் உள்ளனர். அமெரிக்கக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வியினைத் தொடர்வதற்கு ஊக்குவிக்கும் அமெரிக்கக் கல்வி அமைப்பினையும் ஃபுல்பிரைட் ஆணைக்குழு மேற்பார்வை செய்கிறது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் பொருளார முன்னேற்றத்திற்காக அரச ஊழியர்களும் உழைக்க வேண்டும்

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு





(நூருல் ஹுதா உமர்)

பொருளாதார நெருக்கடி மிக்க இக்கட்டான சூழ்நிலையில் அரச ஊழியர்களும் நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க



வேண்டும் எனகல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

பலநோக்கு அபிவிருத்தி செயலணி திட்டத்தின் கீழ் இணைக் கப்பட்டு கல்முனை பிராந்திய சுகாதார நிறுவனங்களில் பணியா ற்றுகின்ற ஊழியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நேற்று (புதன்;கிழமை) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த பயிற்சிக் கருத்தரங்கு பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

சுகாதார சேவையைப் பொறுத்தவரையில் சுகாதார ஊழியர்களின் பணி மிகப் பிரதானமானது. கடந்த காலங்களில் நீங்கள் வெளவேறு பணிகளில் ஈடுபட்டிருந்தாலும் ஏதோ ஒரு அடிப்படையில் சுகாதார சேவையில் இணைக்கப்பட்டுள்ளீர்கள். இது மிகவும் பெறுமதியான தொழிலாகும்.



பொருளாதார நெருக்கடிமிக்க சூழ்நிலையில் தான் அரசாங்கம் இவ்வாறானதொரு நியமனத்தினை வழங்கியது என்பதை இங்குள்ள சகலரும் நினைவில்கொள்ள வேண்டும். அந்தவகையில் சுகாதாரசேவைக்குள் உள்ளீர்க்கப்பட்ட நாம் பொறுப்புடன் செயற்பட்டு நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும்.

சுகாதாரத்துறை ஒரு சேவை என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்கள் கடமைக்கு மேலதிகமாகவும் சேவையாற்றுகின்றனர். எனவே, பலநோக்கு அபிவிருத்தி செயலணி திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களும் கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பாக்கியமாகக்கொண்டு நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலன்கருதி சேவையாற்ற வேண்டும்.– என்றார்.

(05)

# தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் கணக்காய்வு முகாமைத்துவ கூட்டம்





(ஹஸ்பர் ஏ.எச்)

2023 ஆம் ஆண்டின் 4 ஆம் காலாண்டுக்கானபிரதேச கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் வெளிக்கள உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்ட பல விடயங்கள் களவிஜயம் வேலைத் திட்டம்தொடர்பில்ஆராயப்பட்டிருந்தன.

இதில் மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எல்.மஹ்ரூப் கலந்துகொண்டு கூட்டத்தை வழிநடத்தினார்.

உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், நிர்வாக உத்தியோகத்தர் உடகெதர,கிளைத் தலைவர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(05)

# ஜப்பான் தூதரகப் பிரதிநிதிகளுடன் திருமலை எம்.பி. தௌபீக் சந்திப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதரகப் பிரதிநிதிகளுக்கும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கிற்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடலொன்று கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

இதன்போதுசமகாலஅரசியல்விகாரம்தொடர்பாக முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி மற்றும் தற்போதைய நிலைமைகள் சம்பந்தமாகவும் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் பேசப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்திற்கு உதவுவதற்கு தாம் தயாராக இருப்பதாக ஜப்பான் நாட்டு தூதரகப் பிரதிநிகள் நாடாளுமன்ற உறுப்பினருடனான சந்திப்பில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அல் – ஹிக்மா பவுண்டேசனின் தலைவர் இபாதுல்லாஹ் மௌலவியும் கலந்து கொண்டார். (05)

# சாய்ந்தமருது எம்.எஸ்.எம்.பர்ஸான் சோழன் உலக சாதனை புத்தகத்தில்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

புலனுறுப்புகளால் மெய்சிலிர்க்க வைக்கும் சாகசம் புரிந்து சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த சாய்ந்தமருதைச் சேர்ந்த எம்.எஸ்.எம்.பர்ஸான் மீண்டும் இந்தியாவின் ஆலந்தூர் நகரில் மொன்போட் மெற்றிக் உள்ளக அரங்கில் இடம்பெற்ற உலக கராத்தே மாஸ்டர் சங்கம் ஒழுங்கு செய்திருந்த திறந்த கராத்தே சம்பியன்சிப் போட்டியில் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று இரட்டை சாதனை புரிந்துள்ளார்.

இப்போட்டியில் இந்தியாவின் சகல மாநிலங்களில் இருந்து பிரசித்தி பெற்ற கராத்தே வீரர்கள் இப் போட்டியில் பங்கேற்றிருந்தனர்.

இதே வேளை இந்தியாவில் இதுவரை நிலைநாட்டப்படாத ஐந்து ஓடுகளை ஒரே நேரத்தில் உடைத்தல், இரண்டு கண் இமைகளாலும் 10 மி.மீ.கம்பியை வளைத்தல், இரண்டு கண் துருவங்களாலும் சங்கிலியால் பாரம் தூக்குதல், மூக்கினூடாக குளிர் பானம் அருந்துதல், பல்லினால் தேங்காய் உரித்தல், மூக்கினால் வயரை விட்டு அதனை வாய் வழியாக எடுத்து மின் குமிழை எரியச் செய்தல், மூக்கினூடக 4 அங்குல கத்தரிக்கோலை செலுத்துதல், பல்லில் வைத்து 10 மி.மீ.கம்பிகள் இரண்டை வளைத்தல், வயிற்றில் பாரமான கற்களை வைத்து சுத்தியலால் உடைத்தல் , உடம்பு பாகங்களால் ஓடுகளை உடைத்தல் , மரப்பலகையில் கையால்



ஆணிகளை அடித்து ஏற்றுதல் , மரப்பலகைகளை கைகளால் உடைத்தல் , மரப்பலகைகளை கையினால் உடைத்தல், நாணய குற்றிகளை இரு கண்களுக்குள்ளும் வைத்து மறைத்தல், பல்லினால் 15 கிலோ கிராம் எடையை தூக்குதல், பெப்ஸி குளிர்பான அலுமினிய டின்களை கையால் உடைத்தல் போன்ற 16 சாதனைகளை தஞ்சாவூரிலுள்ள பாரத் விஞ்ஞான முகாமைத்துவ கல்வியல் கல்லூரியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர் மத்தியில் நிகழ்த்திக்காட்டி மீண்டும் உலக சாதனைக்காக சோழன் உலகசாதனைப் புத்தகத்தில் தடம்பதித்து இலங்கைக்கும் தான் பிறந்த சாய்ந்தமருது மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

சோழன் உலக சாதனை புத்தகத்தின் நிறுவனர் நீலமேகம் நிமலன் இவரின் செயற்பாடுகளை உலகசாதனைக்காக ஏற்றுக் கொண்டு சான்றிதழையும்,பதக்கங்களையும் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வுகளில் கிழக்கு மாகாண கராத்தே தோ சம்மேளனத்தின் தலைவரும்,தென்கிழக்கு பல்கலைக்கழக கராத்தே போதனாசிரியருமான முஹம்மத் இக்பால் கலந்து கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும்.(05)




JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!